செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௨௲௧ புரட்டாசி	பகுதி
௬௬	செப்டம்பர்—1970	௧

எதிர்மறை வினை எச்சங்கள்

டாக்டர் இராம. சுந்தரம், Ph. D.,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

(இக்கட்டுரையின் முந்திய வடிவம் 1970-சூன் திங்களில் திருச்சியில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இரண்டாவது கருத்தரங்கில் படிக்கப்பெற்று, விவாதிக்கப்பட்டது)

1. தமிழில் பயிலும் வினையெச்சங்கள் பத்து வகையின என்பது தொல்காப்பியத்தால் அறியலாகும் செய்தியாகும். அவை,

> ''செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினைஎஞ்சுகிளவி'' (வினையியல் 31)

> ''செய்யா என்னும் வினைஎஞ்சுகிளவியும்
> அவ்வியல் திரியாது என்மனார்புலவர்'' (உருபுமயங்கியல் 20)

தொல்காப்பியர், 'செய்யா' என்னும் வினையெஞ்சுகிளவியை எழுத்ததிகாரத்தில் தனியே உரைத்திருப்பதன் காரணம் தெளிவாக விளங்கவில்லை. பவணந்தியார் இதனையும் சேர்த்து ஒரு நூற்பாவில் வினையெச்ச வகைகளைக் குறிக்கிறார்:

''செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தென செயச் செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினைஎச்சம் பிற
ஐந்தொன்றாறு முக்காலமும் முறைதரும்'' (நன். 342)

பவணந்தியார் கருத்துப்படி 12 வகையான வினை எச்சங்கள் தமிழில் வழங்கும். தொல்காப்பியம் கூறும் 'செயற்கு' என்ற வினை எச்சம் நன்னூலில் கூறப்படவில்லை. தொல்காப்பியம் கூறாத 'வான், பான், பாக்கு' என மூன்று நன்னூலில் புதிதாகக் கூறப்பட்டுள்ளன. இவ் வினை எச்சங்களில் எதிர்மறை வினை எச்சங்களாக எதுவும் சொல்லப் படவில்லை. ஆனால் 'செய்யா' என்பதை எதிர்மறை வினை எச்சமாகக் கருதும் கொள்கை நம்மிடையே இருந்துவருகிறது. 'செய்யா என்னும் எதிர்மறை வினைஎச்சம் செய்து என்னும் பொருட்டு' என்றும், 'செய்யா என்னும் எதிர்மறை வாய்பாட்டு வினையெச்சம் உடன்பாட்டுப் பொருளில் வந்தது' என்றும் சொல்வதன் மூலம் அக்கொள்கை வெளிப் படுகிறது. இக்கருத்து எவ்வாறு உருக்கொண்டது? 'செய்யா' என் பதன் தொடக்கநிலை என்ன? அது பழந்தமிழில் எவ்வாறு பயின்றுவந் தது? 'எதிர்மறை வினையெச்சங்கள்' யாவை? என்பவற்றைக் கீழ்வரும் பகுதிகளில் விளக்க முற்பட்டுள்ளேன்.

2. தொல்காப்பியம், 'அகநானூறு, புறநானூறு, நற்றிணை, பத் துப்பாட்டு ஆகிய நூற்களில் இருந்து சேகரித்த சான்றுகளைக்கொண்டு இக்கட்டுரை உருவாகியுள்ளது. இவ்வைந்து நூற்களிலும் 'செய்யா' வாய்பாட்டு வினைஎச்சம் 51 இடங்களில் பயின்று வருகின்றது. அவற் றுள் 4 இடங்கள் தவிர ஏனைய இடங்களில் எல்லாம் அது 'செய்து' வாய்பாடாகவே தொழிற்படுகிறது. அந்த இடங்களிலெல்லாம் 'செய்யா' வாய்பாட்டுக்கும் 'செய்து' வாய்பாட்டுக்கும் தொழிற்பாட்டில் (Function) வேறுபாடு இல்லை. வடிவத்தில் (Form) தான் வேறுபாடு உண்டு. எதிர்மறையில் வருவதற்கும் உடன்பாட்டில் வருவதற்கும் எடுத்துக்காட்டுக்கள்:-

'மகளிர் அல்குல் தாங்கா அசைஇ..... மடுப்ப' புறம். 361.17 (எதிர்மறை)

'வேணவா நலிய வெய்ய உயிரா
மொன்பிணையின் வருந்தினேன்' -நற். 61.2. (உடன்பாடு)

'செய்யா' வாய்பாட்டு வினை எச்சம் 'செய்து' வாய்பாட்டோடு ஒற்று மைப்படுதற்கு எடுத்துக்காட்டுக்கள்:-

கேளா = கேட்டு: புறம்: 147.3.
திருந்தா = திருந்தி:புறம் 284.7

பெயரா=அசைத்து : முருகு. 55
உயிரா=பெருமூச்செறிந்து. நற். 61.2

3. 'செய்யா' வாய்பாட்டு வினையெச்சத்தைத் தொல்காப்பியர் 'செய்யா' என்னும் வினைஎஞ்சுகிளவியும் என்றுதான் கூறுகிறாரே தவிர, எதிர் மறைவினைஎச்சமாகக் குறிப்பிடவில்லை. சங்கப்பாடல்களிலும் எதிர்மறையில் இவ்வினைஎச்சம் அருகியே காணப்படுகிறது. 'செய்யா' என்ற வடிவத்தைக் கண்டவுடனேயே அதனை எதிர்மறையாகக் கொண்டு தொழிற்பாட்டில் உடன்பாடாக வருவதால் 'செய்து' என்பதனோடு தொடர்பு படுத்தி, 'செய்யா என்னும் எதிர்மறை செய்து என்னும் பொருட்டு' என்று சொல்லும் நிலைமை தோன்றிற்று இதற்குத் தோற்றுவாய் சங்கப்பாடல்களில் காணப்படுகிறது எனினும், அங்கும் இது எதிர் மறைப்பொருளில் பயன்படக்காரணம் 'செய்யா' என்னும் வாய்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சத்தின் செல்வாக்குத் தான். இவ்வெதிர்மறைப் பெயர் எச்சத்தை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். தொல்காப்பியர் யாண்டும் இது பற்றி உரைத்ததாகத் தெரியவில்லை. 'வினைஎஞ்சுகிளவியும் பெயரெஞ்சுகிளவியும் எதிர் மறுத்து மொழியினும் பொருணிலை திரியா, என்று விதி வகுப்பினும் அவற்றின் வடிவங்கள் பற்றி எதுவும் சொல்ல வில்லை. நச்சினார்க்கினியரும் இளம் பூரணரும் உயிர்மயங்கியல் 20- ஆம் நூற்பா உரையில் இவ்வெதிர்மறைப் பெயரெச்சம் பற்றிக் குறிப்பிடுவர். சங்கப்பாடல்களில் இவ்வெதிர் மறைப் பெயரெச்சம் பயின்று வழங்கி வருதலும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் பெரும்பாலான இடங்களில் இவ்வினை எச்சம் உடன்பாட்டுப் பொருளில்தான் பயிலுகிறது என்பது நினைவு கூரத்தக்கது. அதனால்தான் இவ்வினை எச்சத்தைச் செய்து, செய்யூ என்பதனோடு ஒருங்குவைத்து எண்ணத் தோன்றுகிறது. நன்னூலாரும் இவ்வாறே நூற்பாச் செய்துள்ளார்.

4. 'செய்து' என்பதில் 3 உறுப்புக்கள் (செய்+த்+உ) இருக்கும் போது, 2 உறுப்புக்களை உடைய (செய்+ஆ) 'செய்யா' என்பதனை அதனோடு சேர்த்தல் எவ்வாறு பொருந்தும் என்ற வினா எழலாம். 'செய்து' என்பதனோடு 'செய்யா' என்பது தொழிற்பாட்டில்தான் ஒத்திசைவதாகச் சொல்லப்பட்டதேயன்றி, வடிவத்தில் அல்ல. மேலும் 'செய்து' வாய்பாட்டில் அடங்கும் 'ஓடி, ஆடி' என்ற வினைஎச்சங்களில் இரண்டு உறுப்புகளே உள்ளன என்பது வெளிப்படை 'செய்யூ' என்பதிலும் 2 உறுப்புக்களே உள்ளன. இதேபோல 'செயின்' வாய்பாட்டு வினைஎச்சப் பொருளில் வரும் 'செய்தால்' என்ற வடிவம் 3 உறுப்புக்களைக் கொண்டிருக்கக் காணலாம். ஆகவே, ஈண்டு வடிவத்தைவிடத் தொழிற்

பாட்டைத் தான் முக்கியமாகக் கருதவேண்டும். வடிவு ஒழுங்கு வேண்டும் என்றாலும் காட்டமுடியும் 'செய்+0+ஆ' எனப் பிரித்து, 'செய்' பகுதி, 'ஆ' வினைஎச்ச விகுதி, '0' காலஇடை நிலை என்று விளக்கமுறை மொழியியல் கண்ணோட்டத்தில் விளக்கிக் காட்ட முடியும். செய்து' என்பதில் 'த்' உள்ள இடத்தில் இங்கு '0' இருப்பதாகக் கொள்ளலாம். கொள்ளின், ஒழுங்கு (Pattern) சரியாகிவிடும். எப்படி எடுப்பினும், 'ஆ' என்பதை வினைஎச்ச விகுதியாக எடுக்க வேண்டுமே யன்றி, எதிர்மறை இடைநிலையாகக் கொள்வது பொருந்தாது என்பதே ஈண்டு வலியுறுத்தப்படவேண்டிய செய்தியாகும். அப்படியானால் 'செய்யா' என்பது எதிர்மறை வினை எச்சமாகக் கருதப்படக் காரணம் என்ன?

5. முன்பே குறிப்பிட்டதுபோல 'எதிர்மறைப் பெயரெச்சத்தை' மனதில் கொண்டு ஒப்புமையாக்கமாக (analogy) இதையும் எதிர்மறை யாகக் கொண்டனர் என்பதே விடை. 'ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என அதைசொல்லியது போல இதையும் ஈறுகெட்ட எதிர் மறை வினை எச்சம்' என்று அழைத்ததும் இவ்வொப்புமையாக்கத்தின் நிறைவைக் காட்டும். உடன்பட்டுப் பொருளில் வழங்கிய 'செய்யா என்னும் வினைஎஞ்சுகிளவியை, வடிவ அமைப்பைத் தவறாகப் பிரித்து, எதிர் மறையாகக் கருதி எதிர்மறை உடன்பாட்டில் பயன்படுவதாகக் கொண்டனர். எதிர்மறைப் பெயரெச்சத்தில் இத்தடுமாற்றம் இல்லை. 'வந்த' என்ற பெயரெச்சம் எதிர்மறையில் 'வாரா' என்றோ, 'வாராத' என்றோ வந்து எதிர்மறைப் பொருளைத்தான் தந்து நிற்கும். ஆனால் 'வாரா' என்கிற வினைஎச்சமோ 'வந்து' என்ற பொருளைத் தருகிறது. ஒன்றிரண்டு இடங்களில் 'வராது' என்ற பொருளைத் தருகிறது. ஒன்றி ரண்டு இடங்களில் 'வராது' என்று எதிர்மறைப் பொருளையும் தரும். இத்தடுமாற்றத்தை நீக்கவே, 'எதிர்மறை உடன்பாட்டில் வந்தது' என்று பெருகிவரும் வழக்கிற்கு அருகி வரும் வழக்கை நிலைக்களனாகக் கொண்டனர். அதற்கு மாறாக, 'செய்யா' என்னும் வினையெச்சம் தொல்காப்பியர் காலத்திலும், சங்கப் பாடல்களிலும் உடன்பாட்டுப் பொருளில்தான் பெருவழக்காக இருந்தது என்றும், எதிர்மறைப் பெய ரெச்ச வடிவமும் இதுவும் ஒன்றாக இருப்பதால் இதனையும் எதிர் மறைப் பொருளில் அருகி வழங்கினர் என்றும், பிற்காலத்தில் இவ்வரு கிய வழக்கு மூலாதாரமாகக் கொள்ளப்பட்டது என்றும் விளக்குவதே பொருத்தமாகும். 'செய்யா' என்ற எதிர்மறை உடன்பாட்டில் வந்த தாகக் கொண்ட காரணத்தால், 'செய்யா நின்றான்' என்ற வடிவத்துக் குச் 'செய்கிறான்' எனப் பொருள் கொண்டு, 'ஆநின்று' என்பதை ஓர்

உறுப்பாகப் பாவித்து, அதனை நிகழ்கால இடைநிலை என்றனர். இது பிறழ்பிரிப்பின் ((meta-analysis) விளைவு. 'செய்யா நின்றான்=செய்து நின்றான்'' என வருவதற்குப் பதிலாகச் செய்கிறான் என்ற பொருள் காலப்போக்கில் கொடுக்கப்பட்டது. இங்கு, முன்பு சொல்லிய விளக்கத்தை (செய்யா என்பது செய்து என்னும் பொருட்டு என்பதை)ச் சொல்லமுடியாத காரணத்தால் 'ஆநின்று' என ஓர் இடை நிலை கொள்ளப்பட்டது. நன்னூலார் இதனை நிகழ்கால இடைநிலையாகக் குறிக்கத் தலைப்பட்டார். 'ஆ'காரம் எதிர்மறையாகவும் இன்றி வினை எச்ச விகுதி யாவும் இன்றி, 'நின்று' என்பதனோடு சேர்ந்து, ஓர் இடைநிலையாகக் கொள்ளப்பட்டது. இதற்கு மாறாக, 'ஆ'வை வினைஎச்ச விகுதியாகவே கொண்டு 'நின்றான்' என்ற வினைக்குமுன் 'நிகழ்கால'ப் பொருளிலும், பிறவினைகளுக்குமுன் ஏனைக்காலப் பொருளிலும்வரும் என்று சொல்வதில் தவறிருக்காது பொதுவாகவினைஎச்சங்கள் தமக்குப்பின்வரும்வினைமுற்றில் காணப்படும் கால இடைநிலைக் கேற்பத்தாமும் காலம்காட்டும் என்பது நம் இலக்கண ஆசிரியர் மதமாகும். 'செய்தென் எச்சத்து இறந்தகாலம். எய்திடன் உடைத்தே வாராக் காலம்' (வினை. 42) என்று தொல்காப்பியர் கூறுவார் 'செய' என் எச்சம் முக்காலமும் குறித்து வருதல் உண்டு. ஆகவே, 'நின்றான்' என்பதற்கு முன் 'செய்யா' வினை எச்சம் நிகழ்காலத்தைக் குறிக்கும் எனலாம். ஆனால், 'நின்றான்' என்பதோ இறந்தகால வடிவம்.அது நிகழ்காலம் ஆவது எங்ஙனம்? ஆய்வுக்குரியது. நின்றான்' என்பதில் 'நின்று' என்பதுவரை துணைவினையாகக் கொண்டு சமாதானம் சொல்ல முயன்றாலும், அது மனநிறைவு அளிப்பதாகத் தோன்றவில்லை.

6. 'செய்து' என்பதனோடு 'செய்யா' என்பதைத் தொடர்பு படுத்தத் தொடரியல் காரணமும் உண்டு. 'செய்து' வினைமுதல் வினை கொள்வது போல, 'செய்யா'வும் வினைமுதல்வினை கொள்ளும்.

(எ-டு) காமர் நெஞ்சமொடு அகலாத், தேடூஉ நின்ற இரலை
- நற். 242. 9.

7. பின், எதிர்மறை வினை எச்சங்கள்தாம் யாவை?

தொல்காப்பியத்திலும், மேற்குறித்த சங்க நூற்களிலும் காணப்படும் எதிர்மறை வினை எச்சங்கள் 'மல், மை, உ' ஆகிய விகுதிகளை எதிர்மறை இடைநிலையான 'ஆ/ஆத்' இவற்றின் பின் கொண்டு வருகின்றன.

(எ-டு) அகலாது : நற். 8, 96
உண்ணாது : முல்லை. 33
படாமல : மலை. 365
மயங்காமை : கிளவியாக்கம்,26

'மல், மை' இரண்டும் 'ஆ' எதிர்மறைக்குப் பின்னும், 'உ' 'ஆத்' என்ற எதிர்மறை வடிவத்துக்குப் பின்னும் வரும். 'உ' என்பது 'ஆத்' என்பதனோடு எதிர்மறையிலும், 'த்' என்ற இறந்தகால இடைநிலைக்குப்பின் உடன்பாட்டிலும் வரும். எதிர்மறை வினை எச்சங்களில் 'உ' கர ஈறே மிகுதி. 'மல், மை' இரண்டும் எதிர்மறை 'ஆத்' என்பதற்குப் பின்பே வருகின்றன. இவ்வரையறை இருப்பினும், எதிர்மறைப்பொருளில் 3 ஈறுகளும் வருகின்றன, 'செய்யாது, செய்யாமல், செய்யாமை' மூன்றும் ஒரே பொருள் தந்து தடுமாறும்

8. இவ்வெதிர்மறை வினை எச்சங்கள் வினைமுதல் வினையும் பிற வினையும் கொள்ளும்.

(எ-டு) "அடைசினை முதல்என முறைமூன்று மயங்காமை
நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்"
கிளவி. 26. (வினை முதல் வினை)

'காதலர் வந்தினிது முயங்கிப் பிரியாது......உறையினும்
பெரிதழிந்து உயங்கினை" நற். 174. (பிறவினை)

ஒன்றிரண்டு இடங்களில் இவ்வெதிர்மறை வினை எச்சம் 'பண்புப் பொருளில் வரும் வினையடையாகவும்' (manner of adverb) பயன்படும்,

(எ-டு) அறியாமை=அறியாதபடி : புறம். 386. 8
எஞ்சாமை=எஞ்சாதவண்ணம் புறம். : 120. 8

இவையேயன்றி 'வழாஅல்' என்ற வடிவம் ஒன்று தொல்காப்பியத்தில் (கிளவி. 13) குறிக்கப்படுகிறது. இதனை 'வழ்+ஆ+அல்' என்று பிரித்து 'மல்' என்பதன் மாற்றுருபாக (allomorph) 'ல்/அல்' என்பதைக்கொள்ளலாம். உரையாசிரியர்களும் இதனை 'வழுவாமல்' என்பதன் மரூஉவாகக் கொண்டனர். அல்லது 'வழாஅல்' என்பதை 'அல்' ஈற்று வியங்கோளாகக் கொள்ள வேண்டும். இத்தடுமாற்றத்தால்தான் போலும், இவ்வகை வடிவம் அதிகம் இடம்பெறவில்லை.

9. 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் உடன்பாட்டுப் பொருளில்தான் தொடக்கத்தில் வழங்கிற்று, எதிர்மறைப் பெயரெச்சத்தின் செல்வாக்கால் இதனையும் எதிர்மறையாகக் கொள்ளத் தலைப்பட்டனர்; அதன் விளைவாக 'ஆநின்று' என நிகழ்கால இடைநிலை ஒன்று தோற்றம் கொண்டது 'செய்யாது' செய்யாமல், செய்யாமை, என்பவைதான் எதிர்மறை வினைஎச்சவாய்பாடுகள் என்ற நான்கு கருத்துக்களும் இச் சிறு கட்டுரையில் விளக்கப் பெற்றன. இன்னும் விளக்கம் பெறுதவையும் உண்டு. தமிழ் வினைஎச்சங்கள் அனைத்தையும் வரலாற்று முறையிலும் விளக்க முறையிலும்(Historical and descriptive methods) ஆய்ந்தால்தான் தெளிவு பிறக்கும்.

வரலாற்று நோக்கில் பழமொழிகள்

பேராசிரியர் வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.
தமிழ்ப் பேராசிரியர்,
முதல் நிலைக் கல்லூரி, உரிகம்,
கோலார் தங்கவயல் (மைசூர் மாநிலம்)

வளர்ச்சி இருவகைப்படும். அவையாவன:- எண்ணிக்கை வளர்ச்சி (growth); பண்பு வளர்ச்சி (developmeut). முன்னையது புறவளர்ச்சி அல்லது அளவு வளர்ச்சியின்பாற்படும். பின்னையது அகவளர்ச்சி அல்லது குணவளர்ச்சியின்பாற்படும் பழமொழிகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் இருவகை வளர்ச்சியையும் காணலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொல்காப்பியர் காலம் (கி. மு.700) சங்க காலம் (கி.மு.500முதல் கி.பி 200) (இடைக்காலம் கி.பி. 200-1700) பிற்காலம் (18, 19 ஆம் நூற்றாண்டு, தற்காலம் (20 ஆம் நூற்றாண்டு) என்று ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தமிழ் மொழியில் எங்கெந்தக் காலங்களில் எத்தனை எத்தனை பழமொழிகள் வழங்கின என்பதை வரையறுத்துக் கூற இயலாது. காலம் செல்லச்செல்ல வரலாற்று நிகழ்ச்சிகள், கதைகள், அனுபவம், ஆராய்ச்சி ஆகியவை பெருகப் பெருக அவற்றிற்கேற்பப் பழமொழிகளும் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டே வந்திருக்கின்றன. வெவ்வேறு நூற்றாண்டுகளில் வெவ்வேறு வரலாற்று நிகழ்ச்சியின் அடிப்படையிலும், வெவ்வேறு நூல்களின் சிறப்பைப் பற்றியும் பழமொழிகள் தோன்றியுள்ளன. வழக்கிழந்த மிகச் சில பழமொழிகளைக் கருத்திற் கொண்டு கணக்கிட்டாலும் பழமொழிகள் காலப்போக்கில் பெருகிக்கொண்டு வந்திருக்கின்றனவே தவிரக் குறையவில்லை என்பதை மிகத் தெளிவாக அறியலாம், தொல்காப்பியர் காலத்திலேயே வடசொற்கள் தமிழ்மொழியில் நுழையத் தொடங்கிவிட்டன என்பதை அவர் இயற்றிய நூற்பாக்கள் நன்கு மெய்ப்பிக்கின்றன,

'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வட சொல் லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே!,
(தொல்காப்பியம்:சொல்லதிகாரம்:எச்சவியல்:1)

'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே' (,, 5)

வடசொற்களும் வடமொழிச்சொற்களும் தமிழ் மொழியில் மட்டுமன்று தமிழ்ப் பழமொழியிலும் மிகுதியாகப் புகுந்து விட்டன.

உத்தியோகம் புருச லட்சணம்.
லங்கனம் பரம ஔசதம்.
யதா ராசா ததா பிரசா (மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி)
பிராமணுள் போசன பிரியா.
ரட்சையுள்ள இடத்தில் சிட்சை இருக்கும்.
சம்பளம் இல்லாத சேவகனும் கோபமில்லாத எசமானும்.
சற்புத்திரன் இருக்கிற இடத்தில் தறுதலையும் இருக்கும்.
யதார்த்தவாதி வெகுசன விரோதி.
மௌனம் கலக நாஸ்த்தி.
ரிசிப் பிண்டம் ராத்தங்காது.
யோகவான் பல்லக்கு ஏறுவான்.
விசுவாசம் இருந்தால் வேசியும் பிழைப்பாள்; நீசம் இருந்தால் நீசனும் பிழைப்பான்.

வட சொற்களும் வடமொழிச் சொற்களும் இடம்பெற்றுள்ள மேற் குறிப்பிட்ட பழமொழிகள் யாவும் தொல்காப்பியர் காலத்தில் தோன்றி விட்டன என்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும், இவற்றுள் சில பழமொழிகளாவது தொல்காப்பியத்தில் தோன்றி இருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். வடமொழிச் சொற்கள் கொண்ட தமிழ்ப் பழமொழிகள் மேலும் சில பின்வருமாறு:-.

சாத்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்.
அடித்தாலும் புருசன் அணைத்தாலும் புருடன்.
பால சோசியம் விருத்த வைத்தியம்.
அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
தேசம்தோறும் பாசை வேறு.
நித்திய கண்டம் பூரண ஆயுசு.
மாதா பிதா குரு தெய்வம்.
புத்திமான் பலவானுவான்.

தொல்காப்பியர் காலத்திற்கு அடுத்தாற்போல் வருவது சங்க காலம். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்பது சங்க காலத்தில் தோன்றிய பழமொழி. நக்கீரர் கூற்றாகத் தோன்றிய இப் பழமொழியின் வரலாறு அனைவரும் அறிந்ததே.

திகம்பரச் சமண முனிவர்கள் ஏறக்குறைய கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்கு வந்துவிட்டனர் என்பது வரலாற்று ஆராய்ச்சியாளரின் துணிபு. அவர்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் செல்வாக்குடன் விளங்கினர். திகம்பரச் சமணத் துறவிகள் ஆடையில்லாமல் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு வண்ணான் தொடர்பு தேவையில்லை. 'திகம்பர சந்நியாசிக்கு வண்ணான் உறவு ஏன்?' என்பது இவ்வுண்மையை விளக்க இடைக் காலத்தின் முற்பகுதியில் தோன்றிய பழமொழி. ஒய்சளர் ஆட்சிக் காலத்தில் (12, 13-ஆம் நூற்றாண்டு) கன்னடம் தமிழகத்தில் நுழையத் தொடங்கியது.

சாக்கா பேக்கா.
சாக்கிலே கொஞ்சம் பேக்கிலே கொஞ்சம்.
ஆனால் ஆதித்த வாரம் ஆகாவிட்டால் சோமவாரம்.

முதலிய கன்னட மொழி தழுவிய பழமொழிகள் தமிழகத்தில் தோன்றின.

விசயநகர ஆட்சிக் காலத்திலும் தமிழகத்தில் நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்தபோதும் (கி. பி. 1350-1750) தமிழகத்தில் தெலுங்கர் குடியேறினர். அதனால் தெலுங்கு மொழி தமிழகத்தில் பரவத் தொடங்கியது. அம்மொழியுடன் தெலுங்குப் பழமொழிகளும் தமிழரிடையே பரவத் தொடங்கின. அப்போது தோன்றிய பழமொழிகளுள் சில பின்வருமாறு:-

பெருமாள் பெத்த பெருமாளான கதை
அம்மாவுக்குத் தமிழ் தெரியாது. ஐயாவுக்குத் தெலுங்கு (வடுகு) தெரியாது

வடுகன் தமிழ் அறியான் வைக்கோலைக் 'கசு' என்பான்
ஆனால் ஆதிவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்
தெய்வம் பாதி கெடுக்கும், தெலுங்கன் பாதி கெடுப்பான்
மரியாதை கெட்டால் மாலவாடு
டில்லிக்கு ராசாவானாலும் தல்லிக்குப் பிட்டா
காதுகாது என்றால் நாதி நாதி என்கிறான்
அவசரக்காரருக்கு ஆக்குலோ பெட்டு நாக்கு சேத்திலோ பெட்டு
பேரு பெத்த பேரு தாக நீலுலேது
சேணியனுக்கு ஏன் கோத்தி பில்லா (குரங்குக்குட்டி)
வடுகச்சியம்மா வால் அம்மா, வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கம்மா

வடுகச்சி காரியம் கடுகுச்சு முடுகுச்சு
குதிரைக்குக் குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம்
வடுகனும் தமிழனும் கூட்டுப் பயிரிட்ட கதை

இப்பழமொழிகளில் தமிழ்ச் சொற்களும் தெலுங்குச் சொற்களும் கலந்திருப்பதைக் காணலாம்.

நாயக்கர் ஆட்சிக்குப் பின் தமிழ் நாட்டில் கருநாடக நவாபுகளின் ஆட்சி தோன்றிற்று. அப்போது அராபிய, பாரசீக, உருது, இந்துஸ்தானி முதலிய சொற்கள் தமிழகத்தில் தோன்றி வழங்கின. அப்போது தோன்றிய பழமொழிகளில் சில கீழ்வருமாறு:-

ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது
ஆசை இருக்கு தாசில் பண்ண அதிருஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க
எங்கள் வீட்டுக்காரருக்குக் கச்சேரியில் சேவகம்
நவாப் அத்தனை ஏழை, புலியத்தனை சாது
காகம் இல்லாத ஊர் சோனகன் இல்லாத ஊர்
துலுக்கத் தெருவில் தேவாரம் ஓதினது போல
துலுக்கக் குடியில் ஏது பேயாட்டம்
இருந்தால் நவாப், இல்லாவிட்டால் பக்கிரி
ஆளுக்குத் தகுந்த பேச்சு; அல்லாவுக்குத் தகுந்த குல்லா
ராவுத்தனே சினந்திருக்கும்போது குதிரை கோதுமை ரொட்டிக்கு அழுததாம்
மரைக்காயர்க்கும் உண்டு மாட்டுப் புத்தி
ராவுத்தனைத் தள்ளினதும்அல்லாமல் குழியும்பறித்ததாம் குதிரை
துலுக்கனுக்கு ஏன் துறட்டுக் கடுக்கன்.
பணம் இருந்தால் பாதுசா பணம் இல்லாவிட்டால் பக்கிரி
அப்துல்காதர்க்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்
குலாம் காதர்க்கும் கோலோச்டமிக்கும் என்ன சம்பந்தம்.

இவையாவும் தமிழகத்தின் நீண்ட இடைக்காலத்தில் வெவ்வேறு ஆட்சிக் காலங்களில் தோன்றியவை.

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பது இடைக்காலத்தில் எழுந்த மற்றொரு பழமொழி. ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் (1600-1947) பல பழமொழிகள் தோன்றின.

நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச்சுமை போகாது
அவனுக்குச் செயில் தாய் வீடு

துரைகளோடே சொக்கட்டான் போடலாமா?

துரை சித்தம் கன சித்தம்

துரை நல்லவர் பிரம்பு பொல்லாதது.

துரை வீட்டு நாய் நாற்காலிமேல் ஏறினது போல.

தண்ட சோற்றுக்காரா குண்டு போட்டால் வாடா.

குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.

வெள்ளைக்காரனுக்கு ஆட்டுத் தோல் இடம் கொடுத்தார்கள்.

ஊர் முழுவதும் அடித்து இது எனது என்று என்றான்.

ஒரு குண்டிலே கோட்டை பிடிக்கலாமா?

ஒரு சுருட்டுப் பத்துநாளில் பிடிப்பான்.

துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது போல.

பேர் கவர்னர் புத்தி பட்லர்.

எத்தனை முறை சொன்னாலும் பரங்கி வெற்றிலை போடமாட்டான்

வாத்தி வக்கு இல்லாதவன், போலீசு போக்கு இல்லாதவன் முதலியவை ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய பழமொழிகள்.

'சம்மன் இல்லாமல் ஆசர் ஆகாதே' என்பது ஆங்கிலேயர் ஆட்சியில் தோன்றிய மற்றொரு பழமொழி. இதில் சம்மன் (Summon) என்னும் ஆங்கிலச் சொல்லும் 'ஆசர்' என்னும் உருதுச் சொல்லும் இடம் பெற்றிருப்பன குறிப்பிடத் தக்கது. ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய கட்டபொம்மன் 'வானம் பெய்கின்றது பூமி விளைகின்றது' என்று முழங்கினான். அதுவே, பழமொழியாகி விட்டது. இஃது ஆங்கிலேயர் ஆட்சியில் தோன்றிய மற்றொரு பழமொழி. ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய காலத்தில் 'சுதந்திரம் என் பிறப்புரிமை' 'வெள்ளையனே வெளியேறு' முதலிய விடுதலை முழக்கங்கள் நாடுஎங்கும் முழங்கின. அம் முழக்கங்கள் இப்பொழுது பழமொழிகளாக நிலைத்து விட்டன. 1942 ஜூலைத் திங்களில் வார்தாவில் கூடிய காங்கிசுச் செயற் குழு 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை நிறைவேற்றி வெளியிட்டது. 1942 ஆகச்டுத் திங்கள் 8 ஆம் நாள் பம்பாயில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசுக் குழு 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை ஆதரித்தது. அத்தீர்மானமே மக்கள் மத்தியில் பெருஞ் செல்வாக்குப் பெற்ற வீரமுழக்கமாக விடுதலைக் குரலாக விளங்கி இன்று இந்திய வரலாற்றையே விளக்குகின்ற பழமொழியாகக் காட்சியளிக்கின்றது.

ஐரோப்பியர் காலத்தில் இந்நாட்டில் கிறித்துவம் நன்கு பரவியது. கிறித்துவ சமயத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஊசியின் காதிலே ஒட்டகம் நுழையுமா?' என்னும் பழமொழி தோன்றிற்று.

எம்மதமும் சம்மதம் (சமரசம்)
காங்கிரசு சேவை நாட்டுக்குத் தேவை (காங்கிரசுக் கட்சியினர் குரல்)
சக்திக்கு ஏற்ற-உழைப்பு தேவைக்கு ஏற்றவசதி (பொதுவுடைமை)
வடக்கு வாழுகிறது தெற்குத் தேய்கிறது (திராவிடநாட்டுப் பிரிவினை முழக்கம்)
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு (அறிஞர் அண்ணா)
எதையும் தாங்கும் இதயம் வேண்டும் (,,)
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு (,,)
மக்கள் குரலே மகேசன் குரல் (சனநாயகம்)
ஆகட்டும் பார்க்கலாம். (காமராசர்)
உங்கள் திருப்தியே எங்கள் இலாபம் (வணிகர் குறிக்கோள்)
இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறு (முரசொலி ஏடு)
பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை (குடும்பக் கட்டுப்பாடு)
அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம் (,,)
தொட்டிலுக்கு ஓய்வு தேவை (,)
ஓரிரண்டு குழந்தைகள் போதுமே. (,,)
முதல் குழந்தை இப்போது வேண்டாம்;
மூன்று குழந்தைகளுக்கு மேல் எப்போதும் வேண்டாம். ,,)
நாங்கள் இருவரே; எங்களுக்குக் குழந்தைகளும் இரண்டே. (,,)
சிறிய குடும்பமே சிறந்த குடும்பம் (,,)
அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம் (,,)
தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும் (சங்கத்தின் குறிக்கோள்)

ஆகியவை இந்தியா விடுதலைபெற்றபின் தோன்றிய மொழிகள். இவற்றில் ஒன்றிரண்டு முன்னர்த் தோன்றினும் இந்தியா விடுதலை பெற்ற பின்னரே பெருவழக்குக்கு வந்தன எனலாம், இவை தற்போது புது மொழிகளாகத் தோன்றினும் காலப்போக்கில் பழமொழிகளாக மாறிவிடும் என்பது உறுதி. இவ்வாறு பல்வேறு காலங்களில் எழுந்த பழமொழிகளை நாம் கூட்டிக்கொண்டேபோனால் பழமொழிகளின் எண்ணிக்கை பெருகுவதை மிகத் தெளிவாக அறியலாம். இவையாவும் பழமொழியின் புறவளர்ச்சி. காலந்தோறும் பழமொழிகள் தோன்றிய வகையினை வரலாற்றுக் கண்கொண்டு சுருக்கமாக இவண் கண்டோம்.

பாரதி பாட்டின் அடித்தளம்

சி. சத்தியமூர்த்தி, M. A., B. O. L.

தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்

நீண்டநாள் வசையொன்று தமிழ்நாட்டிற்கு இருந்தது. தமிழ் மொழியைப் புகழேணியில் ஏற்றும் கவிஞன் ஒருவன் இல்லை என்பதே அவ்வசை. அதைத் தீர்த்துவைத்தவர் பாரதியார். இக்கருத்தை மார் தட்டித் திமிர்ந்த ஞானச் செருக்குடன் தாமே பாடுகிறார்.

''புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
 தமிழ்மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
 வசையென்னால் கழிந்த தன்றே!''

என்கிறார். அருங்கவி இயற்றும் ஆற்றல் கைவரப்பெற்ற பாரதியார், திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திருநாலாயிரம், கம்பராமாயணம் ஆகிய நூல்களில் ஆழ்ந்த அறிவும் அளவற்ற ஈடு பாடும் கொண்டிருந்தார். ''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்வேட்பத்'' தம்பாடல்களைத்தாமேஇன்னிசையோடு பாடினார். ''அவர் பாட்டை அவரே பாடக் கேட்கவேண்டும்'' என்று சுத்தானந்த பாரதியார் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது இத்தகைய ஆற்றல்கள்ஒருங்கே மிளிரப் பெற்றிருந்தமையால்தான் ''பாட்டுக்கொரு புலவன் பாரதி'' என்று பாராட்டப்பெற்றார்.

''பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு.
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன்''

என்வறல்லாம் பாரதியாரின் அருமைப்பாட்டினைப் பாரதிதாசன் ஓர் அருமையான பாட்டில் நமக்கு அறிமுகப்படுத்திவைக்கிறார். பாரதியார் கவிதையைத் தன் தொழிலாகக் கொண்டு நாட்டு விடுதலைக்காக அதனைப் பயன்படுத்தினார். அதுவே அவருக்கு இன்பமும் இதமும்

தருவதாயிருந்தது. நமக்குத் தொழில் கவிதை என்று பாரதியார் பாடியது இக்கருத்தை வலியுறுத்தும். தரமான ஒரு கோடிப் பாடல்களைத் தமிழுக்குத் தரவேண்டுமென்ற எண்ணம் பாரதியாரிடம் இருந்திருக்கிறது.

"பண்டைச் சிறுமைகள் போக்கி என்னுவிற் பழுத்தசுவைத்
தென்தமிழ்ப் பாடல் ஒருகோடி மேவிடச் செய்குவையே"

என்று புதுவை விநாயகரை நோக்கிப் பாடுவதிலிருந்து இதனைத் தெரிந்துகொள்ளலாம். தமிழ் இலக்கிய வரலாற்றுப் பெரும்பரப்பில் பாரதியார் அடிச்சுவடுகள் ஆழமாகப் பதிந்துவிட்டன. ஏறக்குறைய இவர் காலத்திலிருந்துதான் எளிய தமிழில் பாடல் எழுதும் புதுத் திருப்பம் ஏற்பட்டதெனலாம். பாரதியார் முதன் முதலில் இயற்றிய "தனிமை இரக்கம்" என்ற கவிதை சற்றே கடுமையான நடையுடைதாய் இருந்தது. கற்றோரும் மற்றோரும் தன் கவிதைகளைச் சுவைக்க வேண்டும் என்பதற்காகக் காலப்போக்கில் தன் கவிதை நடையை எளிதான தமிழில் ஆக்கி அளித்தார்; கவிதையன்றிக் கட்டுரையும் வரைந்தார்; கதைகள் பல எழுதினார்; திறமையுடன் முன்னணியில் நின்றார். எனினும் அவர் வாழ்ந்த காலப் பின்னணி அவரை அமைதியோடு வாழ விடவில்லை. வெள்ளையர் ஆட்சியிலிருந்து இந்நாடு தன்னை விடுவிக்கத் துடித்துக்கொண்டிருந்த வேளை அது. மாற்றான் ஆட்சியில் ஒரு தமிழ்க் கவிஞன் பட்ட துன்பத்தைப் பாரதியார் வாழ்வு நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது. சென்னை மூர்மார்க்கெட்டில் நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்" என்ற பாட்டைப் பாடிப் பாரதியார் ஓர் ஆவேசச் சொற்பொழிவாற்றினார். அதற்காக ஆங்கில அரசினர் அவர்மேல் குற்றஞ் சுமத்தினர். அப்போது சென்னையில் போலீசு டெபுடி கமிசனராகப் பணியாற்றியவர் இராவ்சாகிப் பவானந்தம்பிள்ளை அவர்கள். அவர் சிறந்த தமிழறிஞர் ஆதலால், பாரதியாரின் தமிழறிவையும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கவியாற்றலையும் கண்டு வியந்து அவரைச் சிறைசெய்ய மனம்வராமல் காலங்கடத்திவந்தார். இந்நிகழ்ச்சி முரசுகட்டிலில் துயின்ற குற்றத்தைச்செய்த மோசிகீரனார் ஒரு முத்தமிழ்ப்புலவர் என்பதற்காக அவர்மீது வாள்வீசாது கவரி வீசிய சேரமான் செய்கையை நினைவூட்டுகிறது. இவ்வாறு பிள்ளை அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கையில் பாரதியார் ஆங்கிலக் கொடுங்கோன்மைக்குத் தப்பிப் புதுவையுட் புகுந்து விட்டார். அங்கு ஆங்கில அரசு அனுப்பிய ஒற்றர்கள் அவரை எந்நேரமும் சுற்றித்திரிந்தனர். அத்துடன் அவர் இல்லாத சமயம் அவர்

இருந்த வீட்டினுள் ஏறிக்குதித்து அவரின் கையெழுத்துப் பிரதிகளைக் கவர்ந்து சென்றனர். அதுவுமன்றிப் புதுவை எல்லைக்கு அப்பால் பாரதியாரைக் கடத்திவந்து சூழ்ச்சியாகச் சிறைப்பிடிக்கவும் முயன்றனர். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் பாரதியார் உறுதி தளரவில்லை; ஒருக்காலும் நெஞ்சம் அஞ்சவில்லை. பாண்டியர் காலத்து நக்கீரருக்கும், பல்லவர் காலத்து அப்பரடிகளுக்கும் இருந்த பெருந்துணிவு ஆங்கிலேயர் காலத்தில் பாரதியாருக்கும் இருந்தது.

பாரதியார் பாடல்கள் தமிழ்நாட்டில் தேசியத் தீயை மூண்டெழச் செய்தன. சுப்பிரமணியசிவா, தமிழ்நாடு முழுவதும் நடந்து சென்று தன் வீராவேசப் பேச்சுக்கள் மூலம் பாரதிபாடலைப் பரப்பினர். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் தாம் இறக்கும் தறுவாயில் பாரதிபாடலைப் பாடும்படி கூறி அதனைக் கேட்டுக்கொண்டே தன் உயிர்நீத்தார். பாரதியார் சென்னைக் கடற்கரையில் ஆங்கில அரசை எதிர்த்து ஆற்றிய சொற்பொழிவுகள் பற்பல. பாஞ்சாலசிங்கம் லாலா லசபதிராய் நாடுகடத்தப்பட்டதைக் கண்டிக்கச் சென்னைக் கடற்கரையில் கூடிய கூட்டத்தில் பாரதியார் தாம் இயற்றிய "லசபதிராய் பிரலாபத்தை" அங்கிருந்தோர் நெஞ்சுருகப் பாடினர். அந்நாளைய பாரத நிகழ்ச்சிகளைக் குறித்துவந்த நெவின்சன் என்னும் ஆங்கிலேயர் அவர் பாடியதைக்கேட்டு வியந்து அதனைத் தம் நூலில் வெளியிட்டுள்ளார். கசின்சு என்ற ஆங்கிலேயர் பாரதியாரிடம் பாட்டொன்று கேட்டுக் கடிதம் ஒன்று எழுதினர். அதன் வண்ணம் "வேண்டுமடி எப்போதும் விடுதலை" என்ற பாடலைப் பாரதியார் எழுதி அனுப்பினர். அப்பாடல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. அப்பாடலைக் கண்டதும், கம்பனுக்குப்பின் எண்ணூறுண்டாய்க் கவிஞர் பிறக்கவில்லை என்று, தான் முன்னர்ச் சொல்லிவந்த கருத்தை வ.வே.சு. ஐயர் மாற்றிக்கொண்டாராம். இவைபோன்ற சிறப்புக்களால்தான் மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்,

"பிரான் சென்னும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
வீராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவி யென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்..."

என்று பாரதியார் தம்மைப்பற்றித் தாமே பெருமிதத்துடன் பாடினர்.

"திறமையான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்று தாம் பாடியதற்குத் தாமே தக்கசான்ருனர். பாரதிபாட்டெங்கும் பக்தி, நாட்டுப்பற்று, மொழிபெயர்ப்பாற்றல், புரட்சி ஆகிய நான்கு பண்புகளும் சேர்ந்து காணப்படுகின்றன. பாரதியாரின் மரபு பற்றி வளர்ந்த கவிஞர்களின் பாட்டிலோ அப்பண்புகள் தனித்தனியே சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. பாரதியாரின் பக்திப்பண்பு சுத்தானந்தர் பாடலில்முழு இடத்தைப் பிடித்துக்கொண்டது. பாரதியாரின் நாட்டுப்பற்று, நாமக்கல் கவிஞர் பாட்டிற்கு வழிகாட்டியாயிற்று. பாரதியாரின் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள், கவிமணியின் மொழி பெயர்ப்புப் பாடல்களுக்கு உறுதுணையாய் அமைந்தன. பாரதியாரின் கொழுந்துவிட்டெரியும் புரட்சித்தி பாரதிதாசனின் புதுமை சீர்திருத்தங்களுக்கு ஒளிகாட்டிற்று. இத்தாலிய தேசபக்தர் 'மாசினியின் சபத மொழி" "பெல்சிய நாட்டிற்கு வாழ்த்து", "புதிய ருசியா" ஆகியவற்றைப் பாரதியார் பாடும்போது, அவரே உலக மகாகவி ஆகிவிடுகிருர்.

இவ்வாறு உலகக் கண்ணேட்டத்துடன் நாட்டுப்பற்றையும் இலக்கியச் செல்வத்தையும் செழிக்கச்செய்து, பின்வரும் கவிஞர்களுக்கு ஒரு முன்னேடியாய்த் திகழ்ந்த பாரதியாரைப் பலர் பல கண்ணேட்டத்துடன் ஆராய்கின்றனர்.

"முப்பது கோடி சனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொருபுதுமை"

என்று பாடியதால் சிலர் அவரைப்பொதுவுடைமைவாதி என்பர். வேறு சிலர், "ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்" என்ற அடியை மட்டும் துணைக்கழைத்து அவரின் உள்ளக் கிடக்கையினை அறியாது, அவரை ஒரு நாத்திகர் எனவும் சொல்லத் துணிவர். மற்றையவர் "பெண்ணுக்கு விடுதலை என்று இங்கோர் நீதி பிறப்பித்தேன்" என்று பாடியதால், பெண் விடுதலைக்கென்றே பிறந்தவர் பாரதியார் என்பர். இன்னெரு சாரார் நாட்டுவிடுதலையே பாரதியார் முழுமூச்சு; எனவே அவர் சிறந்த தேசபக்தர் என்பர். இவர்களெல்லாம் பாரதியார் என்னும் தண்ணொளி தரும் தமிழ்ப்பிழம்பைச் சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு தாங்கள் காணுமாறு காண விழைகின்றனர். "புதிய ருசியா" என்ற

பாட்டில் பொதுவுடைமைப் புத்தாட்சி உருசியாவில் தோன்றியதற்குக் காரணம் மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்ததுதான் என்கிறார் பாரதியார். பாரதியாரின் பக்திப்பாடல்களும், விவேகானந்தரின் மாணவி நிவேதிதா, அரவிந்தர், குள்ளச்சாமி, கோவிந்தசுவாமி, யாழ்ப் பாணத்துச்சுவாமி ஆகியோரிடம் அவருக்கிருந்த தொடர்பும் அவரை நல்ல ஆத்திகராகக் காட்டுகின்றன. தாம் பாடிய "சுயசரிதை" யில்

"..........பொய்ம்மைசேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்"

என்று நாத்திகரைச் சாடுகிறார், "புதுமைப்பெண்" பாடலில் பராசக் தியே புதுமைப்பெண்ணாகிப் பெண்விடுதலை பேசுகிறாள் என்கிறார் பாரதியார்.

"ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை, நல்
அருளி னாலொரு கன்னிகை யாகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினும் மேற்செல்வம் எய்தினோம்"

நாட்டு விடுதலை பேசும்போது பாரதியாருக்குப் பராசக்திமீதுதான் நாட்டம் செல்கிறது. பாரதநாட்டைப் பாரதமாதாவாக உருவகிக்கிறார் பாரதியார். உருவகித்த பாரத மாதாவையும் பராசக்தி உருவாகவே பார்க்கிறார். மலையரசன் மகளான பராசக்தியைப்போலவே பாரத மாதாவையும்,

"வெண் பனிமுடி யிமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே!"

என்று விளிப்பதைப் "பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி"யிற்காணலாம். பராசக்தி கையில் சூலத்தைத் தாங்கியிருப்பது போல் பாரதமாதாவும் சூலத்தை ஏந்தி இருப்பதாக அதே திருப்பள்ளியெழுச்சியில் கூறுகிறார். பராசக்திக்குச் சிங்கம் ஊர்தியாக இருப்பதைப்போலப் பாரதமாதாவுக் கும் சிங்கத்தை ஊர்தியாக அமைப்பதைப் 'பாரத தேவியின் திருத்த சாங்கத்'' தில் காணலாம். பராசக்தி நீலநிறமும் முக்கண்ணும் உடைய வள். அதைப்போன்று பாரதமாதவையும்

"நீலக் கடலொத்த கோலத்தி
னாள்மூன்று நேத்திரத்தாள்"

என்று "பாரதமாதா நவரத்தின மாலை"யில் பாடுகிறார். அவர் கருத்துப் படி காளியே பாரதமாதாவாகவும் இருக்கிறாள்.

"காளியும் நமது கனகநன் ஞட்டுத்
தேவியும் ஒன்றெனத் தேர்ந்தநல் அன்பர்காள்!"

என்று "குரு கோவிந்தர்" பாட்டில் வரும் அடிகள், இதனை எடுத்துக் காட்டுகின்றன. தன் வழிபடு கடவுள் வடிவிலேயே தன் தாய்நாட்டையும் கண்டு களித்தது பாரதியாரின் நெஞ்சம். பாரதியாரைப் பொதுவுடமைவாதி, பெண் விடுதலைக்கென்றே பிறந்தவர், தேசபக்தர் என்றெல்லாம் கூறுவோர், அவற்றிற்கெல்லாம் அடித்தளமாயிருப்பது பராசக்தி பக்திதான் என்று பாரதியார் வெளிப்படையாகப் பாடுவதைக்கூட எண்ணிப்பார்ப்பதில்லை. அகப் புறச் சான்றுகளை வைத்துக் கொண்டு ஆழ்ந்து நோக்குவார்க்குப் பாரதியார் பாடல் அனைத்திற்கும் அடித்தளம் பராசக்தி பக்திதான் என்பது புலனுகாமற் போகாது. பாரதியார் பாடுகின்ற எத்துறையைப் பற்றிய பாடலிலும் பெரும்பாலும் "பராசக்தி" என்ற சொல் இல்லாமல் இருக்காது. எனவே பாரதியாரைப் பல்வேறு பெயர்களால் அரைகுறையாக அழைப்பதைவிட, "பராசக்தி பக்தர் பாரதியார்" என்று முழுமையாகக் கூறி மகிழலாம். ஆனுல், கதவைத் தாழிட்டுக்கொண்டு கண்மூடி மௌனியாகி மணிகளை உருட்டி மந்திரங்களை முணுமுணுத்துப் பிறர் நலம் பேணுமல் மக்களிலிருந்து ஒதுங்கி வாழ்ந்த போலிப் பக்தர் அல்லர் பாரதியார். பக்தி என்ற அடித்தளத்தில் நின்றவண்ணம் பாட்டின் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும் என்று நினைத்தவர். இதுதான் அவர் பராசக்தி பக்தியின் உட்பொருள். இதனை அவரே கூறுவதைக் கேளுங்கள்:—

"பராசக்தி தெய்வம். ஆத்ம ஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாத்திரமும் அவளுடைய வேதந்தான்..... இகலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் ஆத்மசாத்திரம் பொய்." (சக்திதர்மம்)

பாரதியார் சமயப்பொறை உடையவர். "ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள், உலகின்பக்கேணி" என்ற கொள்கையில் அவருக்கு எள்ளளவும் ஐயமில்லை.

"ஆத்தி சூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்

உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே''.

பாரதியார் பாடிய ''புதிய ஆத்திசூடி''யில் வரும் இவ்வடிகள், அனைத்துச் சமயங்களும் கைகூப்பி வணங்கும் தெய்வம் ஒன்றெனப் பாரதியார் உணர்ந்திருந்தார் என்பதை உணர்த்துகின்றன. எனினும் அவர் பராசக்தியையே பரவி வழிபட்டார். இது பாரதியார்பாலிருந்த தனித்துவத்தை இழக்காத பொதுமை உணர்வைக் காட்டுகிறது.

பாரத நாட்டினர் வணங்கும் பராசக்தியை ''உலகத்து நாயகி' யாகக் காண்கிறார் பாரதியார். இவ்வுலகெங்கும் உள்ள மக்களை அல்லலினின்றும் காக்கின்றவள் அவளே என்பது அவர் கருத்து. உருசிய நாட்டில் முடிமன்னன் சார் கொடுங்கோலாட்சி நடாத்துகிறான். குடிமக்களுக்குப் பேச்சுரிமை இல்லை. வரம்பு மீறிப் பேசுவோர்க்குச் சிறைதான் கிடைக்கும். இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்று யாராவது கேட்டால், கேட்பவர் நாடு கடத்தப்படுவர். இவ்வாறு அங்கே நீதிமுறை கெட்டு, அநீதியே அறமாகக் கருதப்படும் அளவுக்குக் கொடுங்கோலாட்சி நிலைத்தது. அந்நிலையில் 'உலகத்து நாயகி' உருசிய மக்கள் படும்பாட்டைத் தீர்க்கத் திருவுள்ளங்கொண்டாளாம்.

'' இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால்
வனவாசம், இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள் ''

என்று பாரதியார் அந்நிலையைப் பாடுகிறார். பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள். அவ்வளவுதான்! பெரும் புரட்சி எழுந்தது; மக்களாட்சி மலர்ந்தது.

'' மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந் ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்''

புரட்சி எழுந்ததிற்கும், புத்தாட்சி பிறந்ததிற்கும் பராசக்தியின் திருவருளே காரணமென்று பாடுகிறார். இதனை ஊன்றிப் படித்தால் பாரதியார் அழுத்தந்திருத்தமான பராசக்தி பக்தர் என்று நாம் எளிதில் உணரலாம்.

தெற்குமாகடலின் நடுவிலுள்ள பிசிந்தீவினில் கரும்புத்தோட்டத்தில் தமிழ்மாதரை அன்னியர் பலவித ஆக்கினைக்குள்ளாக்கினர். தப்பும் வழியறியாது தமிழ்மாதர் தவித்தனர். அல்லும் பகலும் அயராது மாடுபோல் உழைக்கும் அவர்கள் "விம்மி விம்மி விம்மி விம்மி அழுங்குரலை"க் கேட்டுக் கேட்டுக் காற்றும் சலிப்புற்றது. அன்னியரால் தங்கள் கற்பை இழந்து அவர்கள் செத்து மடிந்தனர். இந்நிலையைக் கண்ட கவிஞர் நெஞ்சங் குமுறுகிறார். "கரும்புத் தோட்டத்திலே—ஆ" என்று உணர்ச்சியின் உச்சியில் நின்று பன்முறை இரங்குகிறார்.

"நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக்கணத்தினில்
மிஞ்ச விடலாமோ? ஏ!
வீரகாளி, சாமுண்டி, காளீ!

என்று பாடி, எத்தனை நாள் நம் மாதரை இக்கொடுமைக்கு ஆளாக்குவாய் என்று பராசக்தியைத்தான் கேட்கிறார்.

இயற்கை இன்பத்தில் ஈடுபடும்போதும் பாரதியார் கண்முன்பு பராசக்தி திருவிளையாடலே தோன்றும்.

"மந்த மாருதத்தில்—வானில், மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும்—அங்குன் செம்மை தோன்றுமன்றே"

என்று அவரே தன் சொந்த அனுபவத்தைப் பாடுகிறார். "சங்கரன் அன்புத் தழலே சக்தி" என்று பாடுவதில் பாரதியாருக்கு அளவுகடந்த விருப்பு. சுற்றி வாழ்பவர் அவரிடம் கவிதை புனையச் சொன்னால் என்ன? காவியம் இயற்றச் சொன்னாலென்ன? அவர், அவர்கள் வேண்டுகோள் எதையும் பொருட்படுத்தவில்லை. அவர் அடிமனம் அவர்கள் கூறுகின்ற அனைத்திற்கும் மேலாக அன்னை பராசக்தி இன்பம் பாடுவதிலேயே திளைத்தின்புற்றது.

"கதைகள் சொல்லிக் கவிதை எழுதென்பார்,
காவியம் பல நீண்டன கட்டென்பார்,
விதவிதப்படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளை மேவென்பார்,

இதயமோ எனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டிலதன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுதல் அன்றியே''

அதுமட்டுமன்று. பராசக்தியின் கூத்தைப் பாடும்போது அவர் கவிதா நடையில் வீறு பிறக்கிறது. வானில் முழங்கும் இடி, அவள் ஆடலுக்குத் தாளம் போடுகிறது. வெட்ட வெளியில் பூதம் ஐந்தும் கானம் இசைக்கிறது. பராசக்தி அதற்குத்தக அபிநயம் பிடிக்கிருள். அவள் பாரதியார் பாட்டின் ஒலியிலும் பொருளிலும் களித்து ஆடுகிருள்.

"வெடிபடு மண்டத் திடிபல தாளம்போட—வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாட—பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக்—களித்
தாடுங் காளி! சாமுண்டீ! கங்காளி!
அன்னை! அன்னை! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை''

என்று 'தன்னை மறந்த லயந்தனில்' பாடுகிருர். இப்பாடலைப் படிக்கும் போது நமக்குப் பயபக்தி ஏற்படுகிறது. முரசுகொட்டும் நிலையிலும், அண்டமனைத்தையும் ஆட்டுவிக்கத் தான் ஆடும் அப்பனேடு ஆட்டத்தில் போட்டியிட்ட அன்னையை வாழ்த்தப் பாரதியார் மறக்கவில்லை.

"வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டுமுரசே!
வேதம் என்றும் வாழ்க என்று கொட்டுமுரசே!
நெற்றியொற்றைக் கண்ணனேடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க என்று கொட்டுமுரசே!''

தின்று, படுத்து, ஈன்று, வாழ்ந்து மாளும் மற்றைய மனிதரைப் போலப் பாரதியார் வாழவிரும்பவில்லை. சிறந்தது எதையாவது தன் வாழ்நாளில் சாதிக்கவேண்டும் என்ற பேரெண்ணம் கொண்டவர் அவர்.

'தேடிச் சோறு நிதம் தின்று-பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி-மனம்
வாடித் துன்பம் மிக உழன்று-பிறர்
வாடப் பல செயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப் பருவ மெய்திக்-கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்-பல

வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?''

என்று மற்றைய மனிதர் போகும் பொதுநெறியிற் போக விரும்பாத தன் மனநிலையைப் புலப்படுத்துகிறார். அதனால்தான் ''நல்ல வீணையைச் செய்து வீணே அதனைப் புழுதியில் எறிவதின் பொருள் என்ன? சுடர் மிகும் அறிவுடன் மட்டும் என்னைப் படைத்து என்ன பயன் கண்டாய்? நிலச்சுமையாக நிற்கிறேன்; வையகம் பயனுற வாழ்வதற்கு ஆற்றலையுந் தரமாட்டாயா?'' என்றெல்லாம் தனக்கு வந்துற்ற வல்லமையற்ற நிலையைப் போக்குமாறு வல்லபியோடு வாதாடுகிறார். வேண்டிய வரம் கிடைக்கிறது; விம்மி இறும்பூதெய்துகிறார் பாரதியார்.

''எடுத்தகாரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி, மற்றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டினேனுக் கருளினள் காளி;
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாகுமானுடமாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி
பாரில் வெற்றி எனக்குறுமாறே''

பிறிதோரிடத்தில் தமக்கேற்பட்ட மூன்று காதலைப் பற்றிப் பாரதியார் பாடுகிறார். வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகளைக் கண்டு இருபத்திரண்டாம் ஆண்டளவும் அவள் காதலில் காலங்கழித்தார். அடுத்துச் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைக் கண்டு அவள் காதலிலும் ஈடுபட்டார். அதன்பின்னர் ஒரு நாள்; இரவுவேளை; வீதியிலே உலவிவரப் புறப்பட்டார் பாரதியார். அவர்முன்பு கருப்புப் பெண் ஒருத்தி வந்தாள். பாரதியாருக்கு அளவுகடந்த ஆசைஎழுந்தது. அருகே நெருங்கினார். அவ்வளவுதான்! திகைத்தார்; உண்மையை உணர்ந்தார்; அஞ்சி நடுங்கினார். கன்னிவடிவம் என்று தான் தவறாக எண்ணியதை நினைந்து நெஞ்சம் புழுங்கினார். அவள் அன்னைவடிவம் என்று கண்டுகொண்டார்.

''பின்னோர் இரவினிலே-கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவமென்றே-களி
கண்டு சற்றேயருகிற் சென்று பார்க்கையில்
அன்னை வடிவமடா!-இவள்
ஆதி பராசக்தி தேவியடா!-இவள்

இன்னருள் வேண்டுமடா!-பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா!''

கலைமகளையும் திருமகளையும் கண்டு காதலித்தேன் என்று துணிவுடன் சொன்ன பாரதியார், பராசக்தியைக் காதலி என்று கூற நாக்கூசி அன்னைநிலையில் அவளை வைத்து வாழ்த்தி வணங்குகிறார். யாவரினும் மேலாகப் பராசக்தியைப் பாரதி மதித்தமையை இப்பாடலில் காண முடிகிறது.

பாரதியார் கவிதைகளில் நமக்குப் புரியாத பல கருத்துகள் அவர்தம் கதைகள், கட்டுரைகள் வாயிலாகத் தெளிவாகின்றன. கற்பனையே பெரும்பங்காய் வரும் கதைகளிலும் கவிஞரின் பராசக்தி அன்பு அரையும் மீறிப் புலப்பட்டுவிடுகிறது. அதற்குச் சான்றாக வரும் கதைப்பகுதிகளுள், ''செய்கை'' என்ற கதையில் வரும் ஒரு பகுதி பின் வருமாறு:—

''அப்போது வீரப்பமுதலியார் என்னை நோக்கி, உமது கருத் தென்ன' என்று கேட்டார். நான் 'எனக்கெனச் செயல் யாதொன்றுமில்லை', என்ற முன்னோர் பாடலை எடுத்துச்சொல்லி சக்தி நாமத்தைக் கூறி ''நான் செய்கையற்று நிற்கின்றேன். பராசக்தி என் மூலமாக எது செய்வித்தாலும் அவளுடைய இச்ட மேயன்றி என்னுடைய இச்டமில்லை'' என்றேன்''

இங்ஙனம் கதையில் வரும் பாத்திரமாக நின்றபோதும் பாரதியாரின் பராசக்தி பக்தியே வெளிப்படுகிறது.

தம் கட்டுரைகளில் பராசக்தியின் நிலை, அவளை வழிபடும் முறை, அவ்வழிபாட்டால் விளையும் பயன் ஆகியவைபற்றி அவர் எழுதியுள்ள மூன்று பகுதிகளைக் கீழே தருகிறேன்.

''பரமாத்மா வேறாகவும் பராசக்தி வேறாகவும் நினைப்பது பிழை. சர்வலோகங்களையும் பரமாத்மா சக்தி ரூபமாக நின்று சலிக்கச் செய்வதால், சாக்த மதத்தர் நிர்குணமான பிரம் மத்தை இஃச்குணநிலையில் ஆண்பாலாக்காமல், பெண்பாலா கக் கருதி 'லோகமாதா' என்று போற்றினர்''

''சக்தி நல்ல வல்லெழுத்துச் சேர்ந்த மொழி. விக்கிர மாதித்தனும் காளிதாசனும் வணங்கிய தெய்வம். ''உலகத் தார் இந்தப் பராசக்தியை நல்ல மழை அருள்புரியும், சரத்

காலத்தின் முதல் ஒன்பதிரவும் வணங்கிப் பூசைகள் செய்ய வேண்டும்'' என்பது பூர்வீக ஏற்பாடு''.

'இன்பமென்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரசவத்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம் தமிழா உனக்கு நன்ருக அமையும்படி பராசக்தி அருள்புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக.. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக''.

தனி ஒருவரின் வரலாற்று ஏடாக அமைவது நாட்குறிப்பு. இத்தகைய நாட்குறிப்பு உணர்வுமிக்க கவிஞனின் கையில்அகப்படும்போது புதுமெருகுபெறும். வறுமையும் அரசியலும் ஒன்றன்பின் ஒன்ருய் வாட்டி வதைத்த நிலையிலும் நம்பியிருக்கும் தன்னைக் கைவிட வேண்டாம் என்று பராசக்தியைத்தான் அச்சுறுத்துகிருர் பாரதியார்.

"சிச்சி, பராசக்தி! உன்னை நம்புவதை முற்றிலும்
விட்டு நிச்சயமாக நாத்திகனுய் விடுவேன்,
நீ என்னை அற்பத் தொல்லைகட்கெல்லாம்
உட்படுத்திக் கொண்டேயிருந்தால்''

என்பது அவர் நாட்குறிப்பில் ஓர் ஏடு. கூறிக்கொள்ளக் கூச்சப்படும் தனிவாழ்க்கையை அப்படியே வெளியிடும் நாட்குறிப்பிலும் கவிஞர் தன் இடர் களையுமாறு பராசக்தியிடமே முறையிடுகிருர்.

பாரதியாரின் பல்வேறு துறைப் படைப்புக்களிலும் பராசக்தி பக்தி ததும்பிக் கிடப்பதை இதுவரை கண்டோம். பக்தியால் பல நன்மைகள் ஏற்படும் என்பது பாரதியாரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. "பக்தியினுலே—இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி'' என்று தொடங்கும் பாடலில் இக்கருத்தை வலியுறுத்துகிருர். "செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்'' என்று கூறுவதன் வாயிலாகப் பாட்டுத்திறம் பராசக்தி பக்தியால் தமக்கு வந்தமைந்ததை ஒப்புக்கொள்ளுகிருர். நாட்டிலும் வீட்டிலும் பாரதியார் அடைந்த துன்பத்தினை ஆற்றி அவருக்கு அமைதியை ஏற்படுத்த உறுதுணையாயிருந்தது கவிதைக் கலையாகும். துன்பக் காட்டின் உள்ளே நுழையச் சென்ற அவரைக் கவிதை சொல்லித் தடுத்தாண்டவள் பராசக்தியே.

"சோகாட விக்குளெனைப் புகவொட் டாமல்
துய்யசெழுந் தேன்போலே கவிதை சொல்வாள்''

என்பது அவர் குரல். தன் கவிதையில் உணர்ச்சியின் உச்சநிலைக்குப் போகும்போது பராசக்தியைப் பாரதியார் பாடத் தவறுவது இல்லை காட்டுக்குப் புறப்பட்டுப் போகும் இராமன் மேனியழகுக்கு "மையோ! மரகதமோ! மறிகடலோ! மழைமுகிலோ!" என்றெல்லாம் படிப்படியாக உவமைகூறி அவை அவன் மேனி அழகுக்கு முற்றும் பொருந்தாமை நினைந்து கம்பர் ஆற்றாமையால் "ஐயோ" என்று உச்சக்கட்டத்தில் பாடுகிறார் அல்லவா! அதைப்போன்று உணர்ச்சிக் கொந்தளிப்பில் பாரதியாரும பராசக்தியைப் பாடுவார். "பாரதி அறுபத்தாறி"ல் உள்ள பராசக்தி துதியில் தம்மை ஒரு சித்தராகப்பாரதியார் பாடுகிறார். கடிதத் தொடக்கத்தில் அவர் எழுதிய சொல் 'ஓம் சக்தி' என்றேயிருந்தது. புதுவை மணக்குள விநாயகர் நான்மணிமாலையில் விநாயகரைப் பாடும்பொழுதும்,

',விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகரே!
தொண்டுன தன்னை பராசக்திக் கென்று தொடர்ந்திடுவேன்"

என்றுதான் உறுதி கூறுகிறார். பெண்தெய்வமாகிய பராசக்தியினைத் தன்வழிபடுதெய்வமாகக் கொண்டமையால்தான், பாரதியார் கண்ணனைப் பாடும்பொழுது "கண்ணம்மா" எனப்பெண்மை வடிவாகவும் பாடுகிறார். கண்ணன் பாட்டிலும் "கண்ணம்மா என்குழந்தை" என்ற தலைப்பின்கீழ்ப் "பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு" என்ற விளக்கம் பாரதியாரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்ணம்மா-என் குழந்தை என்ற பகுதியைப், பாரதியார் பாடிய 'பராசக்தி பிள்ளைத்தமிழ்' என்றே கூறிவிடலாம். ஏனைய தெய்வங்களை வணங்கும் நிலை வந்துற்றபொழுதும் தன் வழிபடுதெய்வமாக அவற்றைக் கண்டு வணங்கும் ஒரு தெய்வவழிபாட்டைப் பாரதியார் கைவிட்டாரில்லை.

"தசையினைத் தீசுடினும்-சிவ
சக்தியைப் பாடும் நல்லகங்கேட்டேன்"

என்று பாரதியார் வரங் கேட்பதிலிருந்து, "இணர்எரி தோய்வன்ன இன்னா" வந்து நிலைகுலைத்த காலத்திலும் தன்னைப் பராசக்தி பக்தியில் நிலைநிறுத்திக்கொள்ளவே விரும்புகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. "சித்திர பாரதி" என்ற நூலில் பாரதியார் பூசித்ததாகக் கருதப்படும் பராசக்தி திருவுருவத்தின் படத்தை அந்நூலாசிரியர் ரா. அ. பத்மநாபன் அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர். கலியுகத்தை

வீழ்த்திக் கிருதயுகத்தைப் புவியில் கொண்டுவர அவர் பராசக்தி அருளையே தேடினர். தன்னைத் தமிழ்ப் பணியாற்ற இயக்குபவள் பராசக்தியே என்பது பாரதியாரின் முழு நம்பிக்கை. தமிழினத்திற்குப் புதுவாழ்வு தரப் பராசக்தி துணிந்துவிட்டாள் என்று பாரதியார் உறுதி கூறுகிறர். இக்கருத்தை அவர் தாம் பாடிய பாஞ்சாலி சபத முகவுரையில் பின்வருமாறு எழுதுகிருர்:

> ''தமிழ் சாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டியுளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்.''

''சக்தி சக்தி என்ருல் சக்திதாசன் என்றே பேராகும்'' என்று சக்தி திருப்புகழ் பாடிய பாரதியார், எட்டயபுரம் அரசர் வெங்கடேசு ரெட்டப்ப பூபதிக்கு எழுதிய ஓலைத் தூக்கில் தம்மைச் ''சக்திதாசன் எனப் புகழ் வளரும் சுப்பிரமணிய பாரதி'' என்றே பாடியுள்ளார். பாரதியார் பாட்டின் அடித்தளம் பராசக்தியே என்பது இதுவரை கண்ட சான்றுகளால் முடிவாகின்றது. பராசக்தி பக்தர் பாரதியார் கவிஞர் உலகிற்கு ஒரு கலங்கரை விளக்கம். அவர் புகழ் வாழட்டும்! ஒவ்வொரு தமிழனும் அவரை மறவாதிருக்கட்டும்!

அச்சில் வெளிவராத கவி:

தேனெடு செந்தினை திகழ்பலாச் சுளைவடை
திகழுநெகி ழமுதமிகுநெய்
செறிபொரியல் அவியலுறு வறுவலிவை வெண்சோறு
செவ்வனம் படைத்திடச்செய்
தூனெடு முயிரெனு மிவ்விரண் டும்வளர
உவகைமிகப் புலவர் பொருநர்
ஓங்குபுல நிறைபாணர் கூத்தர்விற லியர்துயர்
ஒழிந்திடக் கலைகண்மலியக்
கானெடு மருவிசுனை சார்பறம் பிடமாகக்
கவினரண் சூழ்மாளிகைக்
கபிலரொடு வாழ்தரு வேள்பாரி ஒருருவிற்
கலந்துவந் தாலென்னவந்
தியானெடும் எனதெனு மிவ்விரண் டும்மொழித்
தின்றமிழ்ப் பற்றென்றுமே
யெந்நாளு மொழியாது திகழ்குன்றக் குடிவரு
மெம்மடிகள் அடிவாழ்கவே.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மீது பண்டித திரு.
மீ. கந்தசாமிப் புலவர் பாடியது
—தகவல்:- புலவர் ச. சாம்பசிவன்

மொழி ஆய்வுக்கூடம்

சு. இராசாராம், எம். ஏ,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்-6.

மொழியமைப்புக் கூறுகளைப் பற்றி ஆராய்கின்ற மொழியியலின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட வட்டத்தினின்றும் விரிந்து எல்லோருக்கும் அறிமுகமானதொரு அறிவியலாக மாறியது இருபதாம் நூற்றுண்டின் இடைக் காலத்திலேயே எனலாம். அன்னிய மொழியைக் கற்பிக்கப்பட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையும், அதனைக் கற்கும் முறையிலும் கற்பிக்கின்ற முறையிலும் கல்வித்துறை விரும்பிய மாற்றமுமே இதற்குக் காரணமாக அமைந்தது. இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் மனித வாழ்க்கையில் எல்லாக் கோணங்களிலும் அறிவியல் விளைவித்த மாற்றங்களை விரும்பிஏற்றுக்கொண்ட மனித சமுதாயம் கல்வித் துறையிலும் அத்தகைய மாற்றங்களை விரும்பி ஏற்றுக்கொண்டதில் வியப்பில்லை. அப்பொழுது அறிவியல் கோட்பாடுகளோடு மட்டுமே மொழிகள் ஆராயப்பட்டு வந்தன. அறிவியல் கருவிகளையே மொழியைக்கற்கின்ற—கற்பிக்கின்ற முறையாகக் கைக்கொண்டது. இத்துறையில்ஏற்பட்டதலைசிறந்த மாற்றம் ஆகும். இம்மாற்றம் தாய்மொழி அல்லாத அன்னிய மொழியைக் கற்பதில் மாணவர்க்கு இருந்த பய உணர்ச்சியை அகற்றியது. நெடுங்காலமாகப் பின்பற்றிவந்த வகுப்பறையும் வாத்தியாரும் என்ற நிலையை மாற்றியது. எல்லாவற்றிற்கும் மேலாக இப்புதிய வளர்ச்சி அன்னிய மொழியைக் கற்பதில் ஆர்வத்தை உண்டாக்கியது. எளிய முறையில் நிறைந்த பலனை அடையவேண்டும் என்ற தன்னல உணர்வின் உந்தலே இவ்வார்வம். புதுமை வேட்கையில் மனம்

பற்றுக்கொண்டதே இவ்வார்வத்திற்கு இன்னுமொரு காரணம்.

ஒரு குழந்தை தன்னுடைய பள்ளிப் பருவத்தில் தாய்மொழியைக் கற்பதற்கும், தாய்மொழி அல்லாத ஓர் அன்னிய மொழியைக் கற்பதற்கும் நிறைய வேறு பாடுகள் உள. தாய்மொழியைக் கற்பது ஒரு புதிய மொழிக்கு அறிமுகமாவது ஆகாது. அம்மொழியில் மேலும் வளர்ச்சிபெறத் தன்னைத்தானே ஊக்குவிக்கும் பயிற்சியே ஆகும் அது. இதற்குக் குழந்தையின் ஆர் வம் ஒருபுறம் இருக்கக், கற்பிக்கின்ற ஆசிரியரின் தூண் டுகோலே முக்கியமானதாகும். ஆனால் ஓர் அன்னிய மொழியைக் கற்பதில் ஒரு குழந்தையோ அல்லது வயது வந்தவரோ தன்னைப் புதிதாக அம்மொழிக்கு அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். அம்மொழியின் மொழி யமைப்பைப் (Linguistic Structure) பற்றியும், குறிப்பாகஒலி யமைப்பைப் (Phonetic Structute) பற்றியும் தெரிந்துகொள் வதற்கு முன்னர் அம்மொழியின் எழுத்து மொழியை (Written Language) மாணவர்க்குக் கற்பிப்பது அறிவுடை மையாகாது. மொழியின் நோக்கமும், கொள்கையும் நம் முடைய எண்ணங்களை எழுத்துவடிவோடு மட்டுமே தெரி விப்பது அன்று. எனவே, மாணவர்க்கு அம்மொழியின் பேச்சுமொழி நன்ருகக்கைவரப்பெற்றபின்னரே எழுத்து மொழி கற்பிக்கப்படவேண்டும். மொழியியலின் பரவ லான வளர்ச்சிக்கு முன்னர்த் தாய்மொழியைப் போதிப் பதிலும், அன்னியமொழியைப் போதிப்பதிலும் எந்தவித வேறுபாடும் கையாளப்படவில்லை. இலக்கியங்களின் மூலமாக மொழியைக் கற்பிப்பது என்ற கொள்கையை மாற்றி இலக்கியங்களைக் கற்பதற்காகவே, மொழி சொல் லித்தரப்படவேண்டும் என்ற கொள்கையை இலக்கிய ஆசிரியர்கள் உணர்ந்த பின்னரே தாய்மொழியைக் கற்பிப்பிதற்கும் ஓர் அன்னிய மொழியைக் கற்பிப்பதற்

கும் வேறுபட்ட முயற்சிகள் வேண்டும் என அறிந்தனர். இலக்கிய இலக்கணங்களின் துணையின்றி ஒரு மொழியைக் கற்பிப்பது எவ்வாறு என்று எழுந்த கேள்விக்கு எளிதாகக் கிடைத்த பதிலே மொழியியலின் அடிப்படையோடு ஆக்கப்பட்ட பாடத்திட்டங்களும் ஆய்வுக் கூடமும் (Language Laboratory) ஆகும்.

இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலத்தியல் ஒரு மொழியைக் கற்பது அம்மொழியைக் கேட்பதும், அதையே திரும்பத்திரும்பச் சொல்லிப்பழகுவது மூலமே சாத்தியமாகும் என்ற கொள்கைக்கு மொழி நூலறிஞர் உடன்பட்டனர். மொழி ஆய்வுக்கூடம் இக்கொள்கையைச் செயற்படுத்தப் பெரிதும் உதவும் என்ற முடிவுக்கும் வந்தனர். ஏனெனில் மொழி ஆய்வுக் கூடத்தில் மட்டுமே மொழியைக் கற்கின்றவர் கேட்பவராகவும் அதைத் திரும்பத்திரும்பச்சொல்பவராகவும் இருக்க முடியும். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட மொழியின் ஒரு குறிப்பிட்ட மொழியமைப்பை அடிக்கடி கேட்பதன் மூலம் மொழியமைப்பை (Language Structure) எளிதாகத் புரிந்து கொள்ள முடியும் என்பதோடு திரும்பத்திரும்ப அக்குறிப்பிட்ட மொழியமைப்பைச் சொல்வதின் மூலம் மாணவருக்கு அம்மொழியில் எவ்விதத்தடையுமில்லாமல் இயல்பாகவே பேசும் ஆற்றல் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஒருதனிப்பட்ட மாணவருக்கென இத்தகைய சந்தர்ப்பம் வழக்கமான வகுப்பறையில் கிடைப்பதில்லை.

மொழிகளைக் கற்பிப்பதற்கென உருவாக்கப்படுகின்ற தற்கால மின்னியல் கருவிகளின் அமைப்போடு கூடிய வகுப்பறையே மொழி ஆய்வுக்கூடம். ஆங்கிலச் சொல்லான Language Laboratory என்ற சொல் எவ்வாறு ஏனைய விஞ்ஞான ஆய்வுக் கூடங்களான Chemistry

Laboratory, Botany Laboratory என்பனவற்ரேடு சொல்ல ளவில் மாறுபாடு இல்லாது செயலளவில் வேறுபடு கிறதோ அதைப்போலவே 'மொழி ஆய்வுக்கூடம்' என்பத தற்கு மொழியை ஆராயும் இடம் எனப்பொருள் கொள் ளாது, 'மொழியைக் கற்பிக்கும் இடம்' எனப்பொருள் கொள்ளுதலே சாலச் சிறந்ததாகும். ஆசிரியர்-மாணவர் உறவு மொழியைக் கற்பிக்கின்ற அளவில் முறையே சொல்வதும் கேட்பதும் என்ற நிலையை மாற்றுவதோடு ஆசிரியரின் துணையோடு மாணவர் தாமே மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை எண்ணத் தின் உருவாக்கமே மொழி ஆய்வுக்கூடம் எனலாம். மாணவர் தாமே மொழியைக் கற்றுக்கொள்வதற்கான பயிற்சிகளைச் செய்வதற்குரிய எல்லாக்கருவிகளோடும் அமைந்த வகுப்பறையே மொழி ஆய்வுக்கூடம்[1] என்கிருர் இராபர்ட் லேடோ என்ற மொழி நூலறிஞர். 'கொடுக்கப்படுகின்ற மொழிப் பயிற்சியின் மூலமாக மாணவர் தாம் கற்கின்ற மொழியில் தாம் விரும்புகின்ற மொழி அமைப்புக்களைப் பற்றித் தாமே மேன்மேலும் தெரிந்துகொள்ள மொழி ஆய்வுக்கூடத்தில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது'[2] என்கிருர் டர்னர் என்ற மொழி நூலறிஞர். இத்தோடு 'மொழியின் ஒலிகளில் மாணவர் பயிற்சிபெறவும் மொழி ஆய்வுக்கூடம் உதவுகிறது'[3]

---

1 What constitutes a language laboratory is a special room with necessary equipment set aside for practice by the students. Robert Lado, Language Teaching, 1964.

2 By using the laboratory drills, the pupils are given a real opportunity of mastering the structures they need. J. D. Turner, Introduction to the Language Laboratory.

3 A language laboratory is any mechanical or electro-mechanical device which transmits recorded or 'live' speece to a listener, and which affords the listener a chance to practice the sounds heard. J. Wesley Childers, Poreign Language Teaching, 1964.

என்கிறார் வெச்லிசில்டர்சு என்ற மொழி நூலறிஞர். இத்தகைய மொழி ஆய்வுக்கூடங்களின் வரலாற்றை விரித்துப் பார்ப்போமேயானால் கல்வி, அரசியல் மற்றும் சமூக, பொருளாதார அறிவியல் அடிப்படையில் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும் பல்வேறு நாடுகளின் பல்வேறு விதமான கொள்கைகளுக்கும் இவை எவ்வாறு கருவியாக்கப்பட்டன என்பனவும், அன்னிய மொழியைக் குறுகிய காலத்தில் கற்பிப்பதன் அவசியத்தை எதன் அடிப்படையில் உலக நாடுகளில் சில உணர்ந்தன என்பனவும் உணரப்படும்.

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ஆம் நாள் குடியரசுத்தலைவர்ஐசன்கோவரால்'தேசீயப் பாதுகாப்புக் கல்வி நடவடிக்கை' (National Defense Education Act) என்ற சட்டம் ஒப்பந்தமாகி அமுலாக்கப்பட்டது. இச்சட்டம் கல்வித்துறையில் மாணவர் அன்னிய மொழிகளைக் கற்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தியதோடு நாட்டின் உடனடித் தேவையாக அன்னிய மொழிப் பயிற்சிக்கு இடமும் அளித்தது. இது மக்களிடையே அன்னிய மொழியைக் கற்பதில் ஆர்வத்தை உண்டாக்கியது. இராணுவத்தில் பதினைந்து வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டுவந்த போதனமுறையும், பாடத் திட்டங்களும் இதற்கெனப் பயன்படுத்தப்பட்டன.

யுத்தங்களுக்கு முன்னால் அன்னிய மொழிகளைக் கற்பிப்பதற்கெனப் பிரிட்டன் சில கல்வி நிறுவனங்களை இலண்டன் பல்கலைக்கழகத்தில் நிறுவியபோதிலும் 1940-க்கு முன்னால் அதன் முக்கியத்துவத்தைப் பிரிட்டன் உணராமல் இருந்தது. 'உலகத்திலேயே அரசியலிலும் பொருளாதார நிலையிலும் பிரிட்டனே பேராதிக்கம் செலுத்திவந்ததாலும் தம் குடைக்கீழ் இருந்த நாடுகள் ஆங்கில மொழியிலேயே தம்மோடு தொடர்பு

கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் தம் மக்கள் அன்னிய மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைவிடப் பிறர் தம் மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனநிலையோடு பிரிட்டன் இருந்தது.[4] இம்மனநிலையே அன்னிய மொழிகளைக் கற்பதின் முக்கியத்துவத்தை உணராதிருந்ததற்குக் காரணம் என்பர்.

1954ம் ஆண்டு சோவியத் யூனியன் முதலாவது விண்வெளிக்கப்பலை (Sputnik) வானமண்டலத்திற்கு அனுப்பியபோது உருசியர்களின் அறிவியல் வளர்ச்சி, பிரிட்டனையும் அமெரிக்காவையும் உருசிய மொழியைத் தம் மக்கள் கற்பதன் அவசியத்தையும் அதன் மூலம் அன்னியமொழிகளைக் கற்பிப்பதன் முக்கியத்துவத்தையும் உணரவைத்தது. இதன் பிரதிபலிப்பாக அமெரிக்காவில் தேசீயப் பாதுகாப்புக்கல்வி நடவடிக்கை(National Defense Education Act) என்ற சட்டத்தின்கீழ் அன்னிய மொழிகளைக் கற்பிப்பதற்கெனப்பெருமளவில், பொருள் செலவாக்கப்பட்டது. பிரிட்டன் 1958- இல் உருசிய ஆசிரியர் கழகம் (Association of Teachers of Russian) என்ற நிறுவனத்தை ஏற்படுத்திக் கொண்டது. இக்கழகத்தின் மூலமாகப் பெரும்பாலோருக்கு உருசிய மொழி பயிற்றுவிக்கப்பட்டு ஏராளமான உருசியமொழி நூல்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து இருநாடுகளும் மொழி ஆய்வுக் கூடங்களை நிறுவின. 1957-ஆம் ஆண்டு அமெரிக்காவில்

---

4 The traditional British attitude was that foreigners should learn English rather than Englishmen learn foreign languages, ad attitude which seemed to be justified in practice. Because of Britain political and economic dominance, those whose affairs brought them into contact with Britain used English. Edward. M. Stack, The Language **Laboratory and Modern Language Teaching.**

வில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்று 64 பொது மற்றும் தனியார் செகண்டரிப்பள்ளிகளிலும், 240 பொது, மற்றும் தனியார் உயர்நிலைக்கல்வி நிறுவனங்களிலும் தேசியப்பாதுகாப்புக் கல்வி நடவடிக்கையின் உதவியோடு மொழி ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டன, என்று காட்டுகிறது. 1961 ஆம் ஆண்டு 2,500 ஆகச் செகண்டரிபள்ளிகளிலும், 700 ஆகக் கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் இம்மொழி ஆய்வுக் கூடங்களின் எண்ணிக்கை உயர்ந்தது. 1961-ஆம் ஆண்டு "Education Foundation for Visual Aids" என்ற நிறுவனம் ஒரு மொழி ஆய்வுக் கூடத்தை ஏலிங் டெக்னிக்கல் கல்லூரியில் நிறுவியது. இதுவே பிரிட்டனில் முதன் முதலாக ஒரு கல்வித்தாபனத்தில் அமைக்கப்பட்ட மொழி ஆய்வுக்கூடமாகும். 1962-ஆம் ஆண்டின் முடிவில் 40-க்கு மேல் மொழி ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டன. 1965-ஆம் ஆண்டு ஆராய்ச்சி அறிக்கையொன்று மொத்தமாக 452 மொழி ஆய்வுக்கூடங்கள் இருந்ததாகக் காட்டுகிறது. இன்று ஏராளமான மொழி ஆய்வுக் கூடங்கள் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இருக்கின்றன.

இந்திய நாட்டில் ஏறக்குறையப் பன்னிரண்டு மொழி ஆய்வுக்கூடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இம்மொழி ஆய்வுக் கூடங்களுக்கான இயந்திரங்களும்கருவிகளும் மேல் நாடுகளிலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆகவே பெரும் பொருள் செலவழித்து இம்மொழி ஆய்வுக் கூடங்களைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிறுவிக்கொள்ள நம்மால் இயலவில்லை.

இனி, மொழி ஆய்வுக் கூடத்தின் அமைப்புப்பற்றிக் காண்போம், மொழி ஆய்வுக்கூடம் ஒலிவாங்கிகள் (Microphones), டேப்ரிகார்டர்கள் (Tape-recorders), இயர்ஃபோன்கள் (Earphones), ப்ரிஆம்ப்ளிஃபயர்கள்

(Preamplifiers) ஆகிய மின்னியல் கருவிகளின் அமைப் போடு கூடியது. ஒவ்வொரு மாணவருக்கென ஒவ்வொரு தனி அறை (Booth) அமைக்கப்பட்டு அதனுள்ளே மேற் கூறிய கருவிகள் பொருத்தப்பட்டு இருக்கும். மாண வர்கள் மொழிஆய்வுக்கூட ஆசிரியரின் (Monitor) துணை யோடு தம் தனி அறைகளில் இருந்த வண்ணமே மொழி யைக் கற்கின்றனர். இதற்கெனத் தயாரிக்கப்படுகிற பாடத் திட்டங்கள் சாதாரணப் பாடத் திட்டங்களைவிட முற்றிலும் வேறுபாடானவை. மாணவர்க்குக் கற்பிக்கப்படவிருக்கின்ற மொழியமைப் புப் பகுதி முன்னரே டேப்ரிக்கார்டரில் பதிவு செய்யப் படுகிறது. மாணவர் தம் தனி அறைகளில் அமர்ந்து அக்குறிப்பிட்ட மொழியமைப்புப் பகுதியைத் தம் இயர்ஃ போனின் மூலமாகக் கேட்கின்றனர். அதையே திரும்பத் திரும்பத் தன்னுடைய ஒலி வாங்கியில் ஒலித்து அதை யும் டேப்ரிக்கார்டரில் பதிவுசெய்துகொள்கின்றனர். பின் னர், முன்னர்ப் பதிவுசெய்யப்பட்டிருந்த மொழியமைப் போடுதான் ஒலித்தவற்றைச் சரிபார்த்துக்கொள்கின்ற னர். இவ்வாறு தம் தனி அறைகளில் இருந்தவண்ணமே தாம் விரும்புகிற மொழியமைப்பின் குறிப்பிட்டபகுதியை டேப்ரிகார்டரின் மூலம் திரும்பத் திரும்பக் கேட்டுத் தெரிந்துகொள்ள, இம்மொழி ஆய்வுக்கூடத்தில் வாய்ப்பு உண்டு. வகுப்பைத் தொடங்கவும், நடத்தவும் மாணவர் தவறிழைக்கும்போது திருத்தவும் மொழி ஆய் வுக்கூட ஆசிரியர் தனக்கென அமைக்கப்பட்டிருக்கும் கன்சோலில் (Console) இருந்துகொண்டே மின்னியல் கருவிகளின் உதவியோடு செயலாற்ற முடியும். கற்பிக் கப்படுகின்ற மொழியமைப்புக்களின் (Linguistic Structures) இலக்கண விளக்கத்தை மொழி ஆய்வுக்கூட ஆசிரியர் தனி வகுப்பிலோ அல்லது மொழி ஆய்வுக்கூடத்திலோ நடத்துவார்.

மொழிகளை இவ்வாறு மொழி ஆய்வுக்கூடங்களில் கற்பிப்பதனுல் பலவித நன்மைகள் உண்டு. மொழியமைப்பின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆசிரியர் திரும்பத் திரும்ப வகுப்பில் சொல்வதிலும் அதையே மாணவர் திரும்பத் திரும்ப கேட்பதிலும் இருவருக்கும் உண்டாகும் சலிப்பு அகற்றப்படுகிறது. ஏனெனில், மாணவர் ஆசிரியரின் துணையில்லாமல் தாமே தாம் விரும்பும்மொழியமைப்பின பகுதியைத் தம்முடைய தனி அறைகளில் கற்றுக்கொள்ளலாம். பாடத்தைக் கேட்பதும் கற்றுக்கொள்வதுமாக மாணவர்கள் தம் தனிஅறைகளில் மிகுந்த நேரத்தைச் செலவழிப்பதால் மொழியை மிக எளிதாகக் கற்றுக்கொள்ள முடிகிறது. அத்தோடு ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய கிரகிக்கும் ஆற்றலின் வேகத்திலேயே மொழியைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொதுவாக வகுப்பில் உண்டாகும் கூச்சமும் பயமும் தனிமையில் தவிர்க்கப்பட்டுக் கற்பதில் மாணவருக்கு ஆர்வத்தை உண்டாக்குகிறது.

இன்று உலகெங்கிலும் வெவ்வேறு வடிவங்களோடு காணப்படும் இம்மொழி ஆய்வுக்கூடங்களின் நன்மைகள் ஒருபுறம் இருக்க, மொழியைக் கற்பிப்பதற்கும் கற்பதற்கும் இவை எந்த அளவில் உதவிபுரிகின்றன என்பது இன்று மொழிநூலறிஞர்களிடையே எழுந்துள்ள பிரச்சினையாகும். மொழியொலிகளை மட்டுமே கற்பதற்கும் பயிற்சிபெறுவதற்கும் இவை உதவுகின்றன என்பதும் மொழியின் இலக்கண அமைப்புக்களுக்கு இவை எந்தவிதத்திலும் உதவுவதில்லை என்பதும், இலக்கண விளக்கத்தைப் பொறுத்தவரையில் சாதாரண வகுப்பினின்றும் இதுஎந்த விதத்திலும் கூடுதலாகவோ, அல்லது குறுகியகால அளவிலோ கற்பதற்குத் துணைநிற்பதில்லை என்பதும் இன்றைய மொழி நூலறிஞரிடையே நிலவிவரும் பரவலான கருத்தாகும். இக்கருத்துக்களிடையே இம்மொழி ஆய்வுக் கூடங்களின் இன்றைய வளர்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்திய நாட்டில் ஏராளமான மொழி ஆய்வுக் கூடங்களை இன்னும் சில வருடங்களில் நாம் எதிர்பார்க்கலாம்.

குறிப்பு வினை

டாக்டர் மோ. இசரயேல்
மதுரைப் பல்கலைக் கழகம்

சொல்லின் வடிவ அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வினைக்கு இலக்கணங் கூறிய தொல்காப்பியனார்,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும் (தொ: சொ. 198)

என்னும் நூற்பாவின்கண் வேற்றுமை ஏலாமை, காலமொடு தோன்றுதல் ஆகிய இரண்டும் வினையின் இயல்புகள் என்று வரையறுத்துக் கூறியுள்ளார்.

குறிப்பு வினை-பகுப்பு

அவர் வினைச் சொல்லைக் குறிப்பு, வினை என இரண்டாகப் பகுக்கின்றார். எல்லா வினைகளையும் போன்றே குறிப்பு வினையும் உயர்திணைக்குரியன. அஃறிணைக்குரியன இருதிணைக்கும் உரியன- ஆக அமையும் என எடுத்துக்காட்டுக்களாலும் விளக்கம் தந்துள்ளார். தொல்காப்பிய எச்சவியலில் குறிப்புவினை மூவிட வேறுபாடு உடையனவாகவும் வழங்கும் என்கின்றார்.

தொல்காப்பியத்தின்கண் உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணைகளில் வழங்கும் குறிப்புவினைகள் அமையுமாறு மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

உயர்திணைக்கண், உடைமைப் பொருட்கண்ணும் (எ-டு. குழையினன், கச்சினன்), ஏழாம் வேற்றுமை நிலப் பொருட் கண்ணும் (எ-டு. நிலத்தினன், புறத்தன்), ஒப்பின் கண்ணும் (எ-டு. பொன்னன்னன், புலியன்னன்), பண்பின் கண்ணும் (எ-டு. கரியன், பெரியன்) வழங்குவதோடு அன்மை, இன்மை, உண்மை, வன்மை

ஆகிய சொல்லடிகளைக் கொண்டும் (எ-டு, அலன், இலன், உளன், வல்லன்) தோன்றும்.

அஃறிணைக்கண், இன்று, இல, உடைய, உடைத்து, அன்று, அல்ல என்னும் சொற்களும், பண்புகொள் கிளவியும் (எ-டு. குறுந்தாட்டு, குறுந்தாள), ஒப்பொடு வரூஉங்கிளவியும் (எ-டு. அன்னது, அனைய) குறிப்பு வினைகளாக வழங்கும்.

விரவு வினைகளைக் கூறும் நூற்பாவில் குறிப்பிடப் படும் "இன்மை செப்பல்" என்னும் தொடர் இருதிணைப் பொதுவினைகளாகிய இல்லை, இல் என்பவற்றைக் குறித்து நிற்கின்றது என உரையாசிரியர்கள் கருது கின்றார்கள்.

காலக் குறிப்பா? வினைக்குறிப்பா?

வினை இலக்கணங்கூறுங்கால் "நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என்பதால் வினைச் சொல்லுள் காலம் விளக்காதனவுமுள. அவையும் ஆராயுங்காற் கால முடையவென்றற்கு 'நினையுங்காலை' என்றார் என்பது சேனாவரையர் கருத்து (தொ. சொ. 200). தொல்காப்பிய னார் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலமும்குறிப்பு வினையோடும் பொருந்தும் நிலைமையையுடையன (தொ. சொ. 200) என்கிறார். இவண் வெளிப்படக் காலம் விளக்காதன, குறிப்புவினை என உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். தொல்காப்பியனார் குறிப்பும் காலம் காட்டும் என்பதை உறுதிப்படுத்தும் வாயிலாகக்

'குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்'
....(தொ. சொ. 201)

என்னும் அடிகளில் எல்லா வினைச்சொல்லும் காலமொடு நிகழும் என்கின்றார்.

ஆனால் குறிப்பு வினைகளை ஆயுங்கால் அவை முக்கால வேறுபாடு உடையனவாக வழங்குதல் இல்லை.[1] அவற்றில் காலத்தைக் காட்டும் குறியீடு இல்லை என்பதும் தெளிவு. எனவேதான் உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண அறிஞர் பலரும் 'குறிப்பு' என்பது காலத்தையே குறிப்பது என்றும் காலத்தைக் குறிப்பாகப் புலப்படுத்துவதுதான் குறிப்புவினை அல்லது வினைக் குறிப்பின் இலக்கணம் என்றும் கருதலாயினர்.

அங்ஙனம் காலத்தின் அடிப்படையில் பெயர் பெற்றதாயின் தொல்காப்பியனார் 'காலக்குறிப்பு' என்று ஏன் பெயரிடவில்லை? பல்வேறு இடங்களில் 'குறிப்பு' என்று அவற்றைக் குறித்த அவர் ஒரு இடத்தில் 'வினைக் குறிப்பு' (தொ. சொ. 72) என்று தெளிவாகக் கூறுகின்றனரே! நன்னூலாரும் பல இடங்களில் (நன்னூல், 269 321, 347, 349, 350, 351) வினைக்குறிப்பு என்றே குறிப்பிட்டுள்ளார். ஆகவே தொல்காப்பியனார் கருத்துப்படி குறிப்பாகப் பொருள் தந்து நிற்பது காலம் அன்று; வினை (தொழில்) ஆகும் என்பர் பிற்கால ஆராய்ச்சியாளர் சிலர். உரையாசிரியர்கள் காலம், தொழில் ஆகியவற்றிற்குத் தரும் விளக்கமும் இதற்கு அரண் செய்யும் வகையில் அமைகின்றது. 'இறப்பாவது தொழிலது கழிவு, நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாமை, எதிர்வாவது தொழில் பிறவாமை; தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி, என்கின்ற அடிப்படையில் வினையின்கண் அமைந்த பகுதிதான் புடைபெயர்ச்சியுடையதாக அமைவதாலும் குறிப்பின்கண் அமையும்பகுதி அங்ஙனம் புடைபெயர்ச்சி பெறாமை

---

1. தொ. சொ. 194. தெய்வச்சிலையார் "உடையன் என்பது முன்பு உடையன், இப்போது உடையன், பின்பு உடையன் என்று மூன்று காலத்திற்கும் வேற்றுமைப்பட நில்லாமையின், காலம் குறித்துக்கொள்ளப்பட்டது" என்கிறார்.

யாலும் அறிக. மேலும் சேனாவரையர் ''கரியன், செய்யன் என்புழித் தொழின்மைதெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலின் குறிப்பென்றார்'' என்று குறிப்பிடுவதும் 'குறிப்பு' என்னும் சொல் தொழிற்குறிப்பையே புலப்படுத்துகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறாக ஒரு சாரார் தொல்காப்பியனார் 'குறிப்பு' என்பது காலக் குறிப்பினையே என்றும், மற்றொரு சாரார் தொழிற்குறிப்பினையே என்றும் கூறி முரண்பட்டாலும் உண்மையை ஆயின் வினைக்குறிப்பின்கண் காலமும் தொழிலும் குறிப்பாக அமைந்து கிடக்கின்றன என்பது தெளிவுறும்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் துணைக் கொண்டு குறிப்பு வினையின் உண்மையான இயல்புகள், அவற்றின் வடிவம், பயன் வகை (Function) ஆகியவற்றை ஆய்வோம்.

மொழியியலார் கொள்கை

மொழியியல் அறிஞர் பலரும் குறிப்புவினையை ஒரு தனிவகை என்றே கருதுகின்றனர். டாக்டர் கால்டுவல் ''பழந்திராவிட மொழிகள் எந்தப் பெயரையும் பெயரடையையும் வினைவிகுதி வடிவங்களை இணைத்து வினையாக மாற்றமுடியும். இவ்வினை எண், இடம் ஏற்று வந்தாலும் நிகழ்காலத்திற்கு உரியதாக அமையும்; ஏனெனில் காலக்குறிப்பு அதில் இராது'' என்கிறார்,[2]

எல். வி. இராமசாமி ஐயர் அவர்கள் ''கால வேறுபாடு காட்டாத ஒருவகையான வினைகள் பெயரடி, பெயரடை அடி, வினையல் அடி (Nonverbal roots) ஆகியவற்றோடு வினை விகுதிகளை இணைப்பதால் உண்டாகின்

---

2. Caldwell. R., A Comparative Grammar of Dravidian Languages, 1961, pp. 477, 478.

றன. இவை விகுதிகளுக்கு முன்னர் -அத்- -இன்- ஆகிய இடையொட்டுகளை ஏற்றலும் கூடும்'' என்கின்றார்.[3]

யூலி பிளாக் என்ற அறிஞர் இவ்வகையான அமைப்பு எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது என்றும் அடிப்படைப் பெயர்களோடு வினை விகுதிகள் இணைவதால் இவை அமைகின்றன என்றும் குறிப்பிடுகின்றார்.[4]

குறிப்பு வினை வடிவம்

1.	கச்சினன்	கச்சு + இன் + அன்
	கழலினன்	கழல் + இன் + அன்
	துப்பினை	துப்பு + இன் + ஐ
	அன்பன்	அன்பு + அன்
	அகத்தன	அகம் + த் + அன் + அ
	களிற்றினர்	களிறு + இன் + அர்
	கண்ணேம்	கண் + ஏம்
	புறத்தன்	புறம் + த் + அன்
2.	கரியன்	கரு (கரி) + ய் + அன்
	நல்லன்	நல் + அன்
	பெரியர்	பெரு (பெரி) + ய் + அர்
	கரிது	கரு (கரி) + து
3.	உடையன்	உடை + ய் + அன்
	அல்லன்	அல் + அன்
	உளன்	உள் + அன்

மேற்கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு வினையடிகளை ஆயுங்கால் முதல் வகையின பெயரடிகளாகவும், இரண்

3. Ramaswami Ayyar, L. V., "The Morphology of Old Tamil Verbs," Anthropos, 33(1938) p. 776.

4. Bloch, Jules, The Grammatical Structure of Dravidian Languages, 1954. p. 37.

டாம் வகையின பெயரடை அடிகளாகவும் வேறுசில இவை இரண்டிலும் வினையடிகளிலும் அடங்காதனவாக வும் உள்ளன என்பதை அறிதல் இயலும்.

குறிப்பு வினைகளின் பாகுபாடு

தொல்காப்பியனுர், பவணந்தி முனிவர், உரையாசிரி யர் ஆகியோர் குறிப்பிடும் குறிப்பு வினைகளை மூன்று வகைகளாகப் பாகுபாடு செய்யலாம்.

1. பெயரடியாகத் தோன்றிய ஆக்கப் பெயர்கள்
   எ—டு. கச்சு + இன் + அன்
   கண் + ஏம் முதலியன
2. பெயரடை யடியாகத் தோன்றும் ஆக்கப் பெயர்கள்
   எ—டு. கரியன், செய்யன் முதலியன
3. பிற அடியுடன் அமையும் குறைவினைகள்
   எ—டு. அல்லன், உளன், உள முதலியன.

குறைவினைகள்

வினைக் குறிப்பின்கண் அடங்கும் குறைவினைகள் அல்—, இல்—, உடை—, உள்—, அன்— ஆகிய அடி களினின்று தோன்றுபவையாகும். இவை பெயரடிகளோ பெயரடையடிகளோ இல்லை. பெயரடை அடிகட்கும் வினையடிகளுக்கும் இடைப்பட்ட தன்மையுடையன என லாம். இவைகளைக் குறைவினை அடிகள் என்று கூறுதல் சாலப்பொருந்தும். இவற்ருேடு வினை விகுதிகளை இணைத்துக் குறைவினை முற்றுகள் ஆக்கப்படுகின்றன. குறிப்பு வினையின்கண் இலக்கண நூலார் கூறும் இந்தச் சொற்களே வினைகளாகும் ஏனையவை பெயர்களேயாகும். இவை காலக் குறியீட்டை ஏற்பதில்லை. எதிர்மறைக் குறியீட்டையும் பெறுவதில்லை. இவண் இல்—, அல்— என்னும் அடிகள் இயல்பாகவே எதிர்மறை அடிகள்

என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வினையடிகள் பிற தொழில்வினையடிகளைப் போன்று ஏவலாக வழங்குதல் இல்லை. இவற்றில் தன்வினை ·பிறவினை வேறுபாடு கூட அமைதல் இயலாது. இவ்வடிகளினின்று தொழிற் பெயர்கள் கூட ஆக்கப் பெறுதல் இல்லை. தொழில்வினை யடிகளினின்று வியங்கோள் வினைமுற்றுகள் அமைதல் இயலும். ஆனால் குறை வினையடிகளினின்று வியங் கோள் வினைமுற்றுகள் அமையா. இவற்றினின்று செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களும் அமை தல் இல்லை. எனவே இவை வினைகளாகச் செயலாற்றி னும் குறைவினைகளே ஆகும்.

குறைவினைகளின் அமைப்பினையும் அவை பல்வேறு பால்களில் வழங்கும் பாங்மையினையும் கீழே காண் போம்.

அடிகள்	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்
அல்—	அல்லள்	அல்லன்	அல்லர்	அன்று	அல்ல
இல்—	இலன்	இலள்	இலர்	இன்று	இல
உள்—	உளன்	உளள்	உளர்	உண்டு	உள
உடை—	உடையள்	உடையன்	உடையர்	உடைத்து	உடைய
அன்—	அன்னன்	அன்னள்	அன்னர்	அன்னது	அன்ன

குறிப்பும் குறைவினையும்

குறிப்பில் இலக்கண நூலார் கொள்ளும் இவை யாவும் வினைகளே என்பதற்குப் பின்வரும் சான்று களைக்காட்டுதல் இயலும்.

1. தொல்காப்பியனார் வினையும் குறிப்பும் செயப் படுபொருளை ஏற்று வழங்கும் (தொ. சொ. 72) என்று கூறி இருப்பினும், குறிப்பின்கண் குறைவினை என்று பாகுபாடு செய்யப்பட்ட சொற்கள் மட்டுமே செயப்படு பொருளை ஏற்று வழங்குதலும் பிற ஏலாமையும் அறிதற் பாலது.

எ—டு. யாம் எந்தை இலம்
யான் பொருள் உடையன்
அவன் புலி அன்னன்

2. இக்குறைவினைகள் இங்குக் குறிக்கப்பட்டிருக்கும் வடிவ அமைப்பிலும் வழக்கு நிலையிலும் பயனிலையாக மட்டுமே வழங்குவதாகும். பயனிலையாக வழங்குதல் வினையின் இயல்பாம்.

எ—டு. அவன் அல்லன்
அது அன்று
அவர் இலர்

இவ்வினைகள் வடிவு மாற்றம் பெற்று அல்லது உருபு ஏற்று அல்லது முன்னிணைச் சொற்களை ஏற்று மட்டுமே பெயர்களாகச் செயலாற்ற முடியும்.

3. வினைகள் வினையெச்சத்தால் தழுவப்படுதல் இயல்பு அதாவது வினைகள் வினையெச்சங்களின் முடிக்கும் சொல்லாகச் செயலாற்றுகின்றன. ஒருங்கான பிறவினைச் சொற்களைப் போன்று குறைவினைகள் வினையெச்சங்களால் தழுவப்படுகின்றன.

எ—டு. அவன் பொருள் பெற்று இலன்
அவள் பொருள் கொடுத்து உளள்

4. குறைவினைகளுக்குப் பதிலாக அவ்விடத்தில் ஒழுங்கான வினைகளைத்தான் அமைக்க முடியும்; பெயர்களை அமைத்தல் இயலாது.

எ—டு. அவன் வந்து இலன்
அவன் வந்து [ ]
சென்றான்.

அவன் பொருள் உடையன்
அவன் பொருள் [ ]
தந்தான்

அவன் நல்லவன் அல்லன்
அவன் நல்லவன்[ ]
ஆயினன்

5. குறைவினை யடிகளினின்று குறைவினை எச்சங்கள் அமைதல் இயலும்.

எ—டு. அல்— அன்றி அல்லா
இல்— இன்றி இல்லா
உள்— ——— உள்ள
உடை— உடைய

6. வினையெச்சம் ஏற்கும் முடிக்குஞ் சொற்களைக் கூறும் தொல்காப்பியனார்,

வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே (தொ. சொ. 432)

என்னும் நூற்பாவின்கண் குறிப்பு வினை ஆக்கவினையொடும் முடிவு பெறும் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் குறிப்பின்கண் அவர் அமைத்துள்ள குறைவினைகள் ஆக்க வினைகளை ஏற்றுத்தான் முடியவேண்டும் என்ற உறுதி வழக்கில் காணப்படுதல் இல்லை.

எ—டு. அவன் பொருள் உடையன்
அவன் நல்லவன் அல்லன்

எனவே தொல்காப்பியனார் இங்குக் குறிப்பிடும் வரையறை அவர் குறிப்பின்கண் கொள்ளும் வினையல்லாத ஆக்கப்பெயர்களுக்கே முழு அளவில் பொருந்துவதாகும்.

வினைக்குறிப்பும் பயன்வகையும்

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் குறிப்புவினைகளின் வினை இயல்பு வினைஅல்லாத இயல்புகள் அனைத்தும் ஆய்ந்த பின்னர், பயனிலைகளாகச் செயலாற்றும்

பெயர்கள்தான் குறிப்பு வினைகள் என்று கூறி உள்ளார்கள்.[5] பெயரடிகளினின்றும் பெயரடை அடிகளினின்றும் ஆக்கப்படும் குறிப்புவினைகளைப் பொறுத்த வரையில் பேராசிரியர் அவர்களின் முடிவு முற்றிலும் ஏற்றுக் கொள்ளற்குரியதே. அவை பெயர்களாகவே செயலாற்றுவதால் அவற்றைப் பெயர்வகைகளில் ஒன்றான ஆக்கப் பெயர்களாகக் கொள்ளலாம். ஆனால் இலக்கண நூலார் வினைக்குறிப்பின்கண் கொள்ளும் குறைவினைகள் வினைகளாகவே செயலாற்றுகின்றன என்பது முன்னர்த் தெளிவுபடுத்தப்பட்டது. அவை வினைகளே ஆகும் என்பது உறுதி.

முடிவு:

எனவே வினைக்குறிப்பு என்ற இலக்கண நூலார் கொண்டிக்கும் சொற்கள் காலம், தொழில் ஆகியவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன என்பதும், அவற்றுள் பெயரடி, பெயரடையடி ஆகியவற்றுடன் விகுதிகள் இணைந்து அமைவன பெயராகும் என்பதும், பெயரடை அடிக்கும் வினை அடிக்கும் இடைப்பட்ட இயல்பு வாய்ந்ததும் ஏவல்வினையாக வழங்காததுமான குறை வினையடிகள் வினைவிகுதிகளை ஏற்றுக் குறைவினைகளாக அமைகின்றன என்பதும் குறைவினைகள் வினைகளின் இயல்பைப் பெற்றுச் செயலாற்றுவதால் வினைகளே ஆம் என்பதும் அறிகின்றனம்.

வினைக்குறிப்புகள், பல ஆக்கப்பெயர்கள் சிலகுறை வினைகள் ஆகியவற்றின் தொகுப்பேயாகும்.

---

5. Varadarajan, M. "குறிப்பு வினை"—Tamil Culture VIII (1959), p. 92.

பக்தி இலக்கியம் தந்த பாவலர்கள் : சிவப்பிரகாச சுவாமிகள்*

பண்டித வித்துவான் ச. சாம்பசிவன்,
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

''வித்தாகி, முளையாகி, விளைவதாகி, விளைவிக்கும் பொருளுமாகி, மேலுமாகிக், கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக், குறைவாகி, நிறைவாகிக் குறைவிலாத சத்தாகிச் சித்தாகி, இன்பமாகிச், சதா நிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சியான முத்தாகி, மாணிக்கமாகித் தெய்வ முழுவயிரத் தனி மணியாய் முளைத்த தேவை''ப் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய பாவலர்கள் பலர் நம் தமிழகத்தில் உண்டு. இவர்கள் இயற்றிய இலக்கியங்களை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால் நனைந்து நனைந்து, ''அருள் நிதியே, நன்னிதியே, ஞானநடத்தரசே என்னுரிமை நாயகனே'' என்று வனைந்து பாடுங்கால் உடல் குளிரும்; உயிர் தழைக்கும்; கடலனைய பேரின்பம் துளும்பும்; கருணைமலர்த் தேன் பொழியும். இத்தகைய பக்திச்சுவை கனியப் பாடிய அருளாளர்களில் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் என்போரும் ஒருவர்.

சிவப்பிரகாச சுவாமிகள், அருள் பழுத்த உள்ளத்தினர்; மூவகை நச்சும் மாய்வகை இயற்றி, புலன்வழிச் செலாது பொறியினை மடக்கிச், செந்நெறி நின்ற சீலர். ஏறத்தாழ 300 ஆண்டுகட்குமுன் காஞ்சீபுரத்தில் வீர சைவமரபில், குமாரசாமி தேசிகர் என்பார்க்கு அருமந்த மகவாய்த் தோன்றினர்; இவருடன் பிறந்தார் மூவர். அவர்கள் முறையே வேலைய சுவாமிகள், கருணைப்பிரகா

---

* (12—8—70 — திருச்சி வானொலி நிலையத்தில் பேசியது. நிலையத்தார் இசைவு பெற்றது.)

சர், ஞானம்பாள் ஆவர். சிவப்பிரகாசர் தொடக்கத்தில் திருவண்ணாமலையிலுள்ள குருதேவர் என்பாரிடம் தமிழ் கற்றார்: வயல்படுசெந்நெல் நிறைவுற விளைக்கும் துறைமங்கலத்தில் தங்கியிருந்தார்; நெல்லைநகர் நண்ணி வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் இலக்கணங் கற்கச் சென்றார். அவர் விருப்பப்படி "கு" என்று தொடங்கி, ஊருடையான் என்று இடையில் வைத்துக் கு என்பதையே இறுதியாகக் கொண்ட வெண்பா ஒன்றினைப் பாடினார்; திருச்செந்தூர் சென்று கந்தன் விடயமாக நிரோட்டக யமக அந்தாதி நேர்பெறப் பாடி, ஆங்குள்ள புலவரை வென்றார். பின்பு சிதம்பரம் சென்று ஒரு திருமடத்தில் தங்கினார்; தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளுடன் காஞ்சிபுரம் சென்று, தவத்திரு சிவஞான பாலைய சுவாமிகளைக் கண்டு அவரையே தம் ஞானசிரியராகக் கொண்டார். தம் தங்கை ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகட்கு மணமுடித்துக் கொடுத்தார். தம் தம்பியர் இருவரையும் இல்லறத்தில் இருக்கச் செய்து தாம் தூய துறவறநெறி மேற்கொண்டார். பல திருத்தலங்கள் சென்று இறைவனை வணங்கிப் பாமாலைகள் பல தொடுத்தார்; இறுதியில் தம் 32-ஆம் வயதில், நல்லாற்றூரில், பாலைய சுவாமிகளால் விடப்பட்டிருந்த திருமடத்தில் இறையோடு இரண்டறக் கலந்தார்.

சிவப்பிரகாசர் இயற்றிய செந்தமிழ்ப் பனுவல்கள் பலவாகும். அவை, கற்பனை வளமும் கருத்துச் செறிவும் உடையன; அணிகள் பலவும் அழகுற அமையப்பெற்றன; சிவபெருமானின் கருணை வெள்ளம் காட்டுவன.

இவரியற்றிய "பிரவு லிங்க லீலை" கற்பனைக் காவியம் எனக் கற்றுவல்ல பெரும் புலவரால் பாராட்டப்பெறுவது. சிவபெருமான் அல்லமப் பிரபுவாக வந்து செய்த திருவிளையாடல்களைக் குறிக்கும் நூல் இது.

மெய்ஞ்ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் போர் நடப்பதும், முடிவில் மெய்ஞ்ஞானம் வெல்லுவதும் ஆகிய உட்கருத்துக்கள் அமையப் பாடப்பெற்றது இது. இறைவன் அல்லமதேவனுக வந்து "சமயம் எது? பொருள் நூல் எது?" எனத் தவிக்கும் மக்கட்குத் தெளிவு காட்டிச் சைவ சமயத்தின் ஒரு பகுதியாகிய வீரசைவத்தை வளர்த்த பான்மையை விளக்குகிறது. ஆயினும் இதில் வந்துள்ள உள்ளுறைப் பொருட்கள் எந்நாட்டார்க்கும் எச்சமயத்தார்க்கும் பொதுவானவை எனலாம்.

நூலின் தொடக்கச் செய்யுளே நமதுள்ளத்தைக் கவர்வதாக அமைந்துள்ளது. உலகமளந்தானும், நான்முகனும் தம்மைக் காத்தருளவேண்டுமென்று ஏத்திநிற்க, அவர்களிடத்துச் செல்லாமல், தானே உவந்து, எம் உள்ளங்கையினிடத்து விரும்பி அமர்ந்தவன் மாமணிச் சிவபெருமான். மலர்கள் மிகுந்துள்ள மிகப்பெரிய மரம் ஒன்று; அதன் கொம்பு நுனியில் பொருந்தியுள்ளது பசுந்தேன்; அதனைப் பெறுதற்கெனத் தகுதியுடையார் பலர் இருக்க, அவர்க்குக் கிடைக்காமல், கையும் காலும் முடங்கியவன்—அறிவில்லாதவன் ஒருவனது நாவில் அவ்வின்பத் தேன் தானேவந்து ஒழுகினுல் எத்தகையதோ அத்தகைய செயலே இது என்கிருர்:—

"பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன் கைகான் முடங்கு பொறியிலிதன்
னுவா யொழுகிற் றெனவுலக மளந்த மாலு நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத் தானே யுவந்தெங் கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத் தொழுது வினைக்கு விடை
கொடுப்போம்"

இத்தகைய வள்ளற் பிரானும் சிவபெருமானைத் தொழுது எம்மைப் பிறவியில் அழுத்தி வருத்தும் கருமத்துக்கு விடைகொடுப்போம் என்கின்ருர்.

காவிய நாயகனும் அல்லமதேவரைத் துதிக்கவந்த இடத்துச் சிவப்பிரகாசர், கலைமதிப்புலவர், சித்தர்,

முனிவர், நான்முகன், நெடியோன் ஆகிய அனைவரையும் உட்கொண்டு, மிக்கவலிமையையுடைய மாயையின் தலையையும் மிதிக்கும் தன்மையர் அல்லமர் எனக் கூறிச் சிவபெருமானின் பெருமையைப் புலப்படுத்துகிறார்.

இறைவன் வீற்றிருக்கும் திருக்கயிலாயத்தில் பேரவை கூடிற்று. அப்போது நிகழ்ந்ததைப் புலவர் கூறும் நயம் காண்போம்.

" துதிப்ப ரோர்சிலர்; பாடுவ ரோர்சிலர்; துள்ளிக்
குதிப்ப ரோர்சிலர்; கைகளாற் றேளினை கொட்டி
யதிர்ப்ப ரோர்சிலர்; நெக்குநெக் குருகிநெஞ் சகமெய்
விதிர்ப்ப ரோர்சில ராயின ரவையிடை மிடைந்தோர்"

வநவசைமாநகரின் மதிலும் அகழியும் எப்படியுள்ளன? மதில், சூரிய மண்டலம் வரை உயர்ந்துள்ளது. அகழி, நாகலோகம் வரையும் தாழ்ந்துள்ளது. ஆனால், உயர்ந்து சென்ற மதிலோ, சூரியன் காலடியிற் கிடக்கிறது; தாழ்ந்து சென்ற அகழியோ ஆதிசேடனின் மணிமுடியில் வீற்றிருக்கிறது. "தாழ்ந்தோர் உயர்வர் என்று மிக உயர்ந்தோர் தாழ்வர் என்று மறஞ் சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்" என்ற அரிய கருத்தை அழகுறக்காட்டுகின்றார். இத்தகு நகரத்தில் எவ்விதக் குறையும் இல்லை; ஆனால் ஒரே ஒரு குறை. "கொடுப்போர்க்கு இரப்பார் இல்லாத குறையொன்றுள்ளது" என்கிறார்!

ஓசை நயம்படப் பாடுவதிலும் அவர் வித்தகர். ஒரு சான்று:-

"பற்றுமன மோடியிரு பார்வையினு மெய்தி
மற்றைய புலன்களை மறந்துநட மாடும்
பொற்றொடியை நண்ணவுயர் பொன்மதி லுறுப்பி
னுற்றபொறி போலசைவொழிந் திளைஞர் நின்றார்".

இவரியற்றிய "நால்வர் நான்மணிமாலை', "விருந்து" என்னும் சிறு நூல்வகையைச் சேர்ந்தது. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால் வகை மணிகளை முறையே கோக்கப்பட்ட மாலைபோல வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிரலே வர அந்தாதித் தொடையாக 40 செய்யுட் களைக் கொண்டதோர் நூல் இது. சைவசமய குரவரின் வரலாறு, தேவார திருவாசகப் பெருமை, இறைவன் திருவருள் ஆகியன, கற்பனை நயத்துடன், பக்திச் சுவையுடன் சிவப்பிரகாசரால் பாடப்பெற்றுள்ளன. எல் லாப் பாக்களுமே சிறப்பாக உள்ளன எனினும் மணி வாசகரைப் பற்றிய பாக்கள், கன்னெஞ்சையும் கனிவிக் கும் தன்மையனவாய் அமைந்துள்ளன. காரணம், இப் பாக்கள் ஆசிரியப்பாவால் அமைந்துள்ளமை எனலாம்.

"மணிவாசகர் எத்தகையார்?" ஆம். "பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன்". அப் புனிதன் புகன்ற வாசகமே வாசகம்; அவ்வாசகத்திற்கு உணர்த்தப்படும் பொருளும் சிவனேயாவன்" என்கின் றார் சிவப்பிரகாசர்.

"மணிவாசக! சிவபெருமானை அடைதற்கு அடியார் பலர் எத்தனையோ அருஞ்செயல்களைச் செய்தனர். கணம்புல்லர், தம் முடியை விளக்காக எரித்தார்; இயற்பகை, தம் துணைவியை அளித்தார். இளையான்குடி மாறர், நெல்முளை வாரி இன்னமுது ஈந்தார். இங்ஙனம் பலரும் பலவிதமாக அருஞ்செயல்களைச் செய்துநிற்கச் சிவபெருமானே, பாடும்பணியை நீ கூடும்பொருட்டு நரி யைப் பரியாக்கிப் பாண்டியனுக்கு விற்றார்; பிட்டுக்கு மண் சுமந்தார்; பிரம்படியும் பட்டார்; என்னே விந்தை!" என ஏத்துகிறார்.

மாணிக்கவாசகன் என்னும் மாமழை, சிவன் என்னும் கருணைக் கடலை முகந்து உலகம் உவக்குமாறு, திருவாசகம் என்னும் பெருவெள்ளம் பொழிவது; ஓதுவார் மனம் எனும் ஒள்குளம் புகுந்து, நா எனும் மதகில் நடந்து, கேட்போர் செவி எனும் மடையில் சென்று, உள்ளம் எனும் நிலத்திற் பாய்வது; அன்பு எனும் வித்தில் சிவம் எனும் சிறு முளை தோன்றி, வளர்ந்து, கருணை மலர்ந்து, முக்தி எனும் மெய்ப்பயன் தருவது" என்கிறார்.

"ஆதிசீர் பரவும் வாதவூரண்ணல் மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன் எத்தகையது?" இதோ சிவப்பிரகாசர் கூறுகின்றார்:—

"திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

"வாதவூரன்ப! பவளவார்சடையோன்தன் பேரருளைப் பெற்றாய். பெற்றிருந்தும், பெறுதார்போல வருந்தி, நெஞ்சம் நெக்குநெக்கு உருகி நிற்கின்றாய். ஆனால் பேயேனாகிய யானோ, அவனருள் பெறாதிருந்தும், பெற்றார்போலப் பெருமகிழ்வுற்று உளக்கவலை தீர்ந்தேன். "நன்றறிவாரிற் கயவர் திருவுடையர் நெஞ்சத்தவலமிலர்" என்ற செஞ்சொற்பொருளின் தேற்றம் அறிந்தேன் இப்போது" என்கிறார்.

சிவப்பிரகாசர் இயற்றிய திருவெங்கைக் கோவை என்பது திருவெங்கனூர் இறைவனாகிய பழமலைநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. அகப்பொருட்சுவை பொதிந்தது; திருக்குறட் கருத்

துக்கள் பல்கப்பெற்றது. சிவபெருமானின் கருணையைப் புகழ்வது.

திருவெங்கையுலா என்ற நூலில், திருவெங்கை நாதர் தேர்மீது இவர்ந்து உலா வருவதையும், பேதை முதல் தெரிவை ஈருகவுள்ள மங்கையர், அவரைக்கண்டு அவரது அழகில் ஈடுபட்டுக் காதலுற்றதையும் அழகுறப் பாடுகின்ருர் சிவப்பிரகாசர். இடையிடையே தம்மை ஆதரித்த வள்ளல் அண்ணுமலை ரெட்டியாரின் ஈகைத் தன்மையினையும் விதந்து போற்றுகின்ருர்.

'பெரியநாயகி அம்மை கலித்துறை'' நூலில், உமையம்மையின் இல்லறமாண்பை இனிதெடுத்து ஓதுகின்ருர். கணவனுகிய சிவபெருமான், அம்மையாருக்குக் காஞ்சிநகரில் இருநாழிநெல்லே கொடுத்தார். அம்மையார் எண்ணிலா உயிர்களேக் காப்பாற்றும் கடமையுடையவர். அவர் அந்நெல்லேக்கொண்டே மனையறத்தையும் நடாத்தித் தன் மக்களாகிய எல்லா உயிர்களேயும் காப்பாற்றுகிருர். ஆதலின், இத்தகு மனைமாட்சி அடைந்துள்ள அம்மையாருக்கே கற்பின் பெருமையுண்டு. அல்லாமல் வேறு எவர்க்கும் அப்பெருமை இல்லே என்கின்ருர் சிவப்பிரகாசர்:-

சிவப்பிரகாசர், பொம்மபுரத்திலிருந்தபோது, காலே நேரத்தில் கடற்கரையில் தங்கியிருந்தார். அப்போது சில அரிய கருத்துக்கள் அவருள்ளத்தில் தோன்றின. அவை பாட்டாக வெளிப்போந்தன. அவையே ''நன்னெறி'' எனப்படும். 40 வெண்பாக்களே உடைய இந்நூல் அரிய அறவுரைகளேத் தன்னகத்தேகொண்டு திகழ்வது.

திருவண்ணுமலே ஈசன்மீது பாடப்பெற்றது ''சோணசைலமாலே''. திருவண்ணுமலேயை வலமாக மூன்றுமுறை வருவதற்குள் 100 பாடல்கள் அமைந்த

இந் நூலைப்பாடிமுடித்தார். இதில் ஒவ்வொரு பாட்டி லும் முதல் 2 அடிகளில் வேண்டுகோளும், பின்னிரண்டு அடிகளில் இறைவன் புகழும் அமைந்துள்ளன:-

"சீரணி புகழும், கல்வியும், சிறந்த செல்வமும், இல்லில்வாழ்
பவர்க்குப்
பேரணி கலமென் புதல்வரும், கதியும், பெறத்துதிப்
பவர்க்கருள் பவன்நீ"

என இறைவன் புகழ் பாடுகின்றார்.

இவை தவிரத் திருக்கூவப் புராணம், வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, பழமலை அந்தாதி, பெரிய நாயகி திருவிருத்தம், திருக்காளத்திப் புராணத் தின் இடைப்பகுதிகள், திருவெங்கைக் கலம்பகம், திருக்கபரிபாடை, சிவஞானபாலயசுவாமிகள் கலம்பகம், தாலாட்டு, நெஞ்சுவிடுதூது, முதலான பல நூல்களைப் பாடியுள்ளார் இவர்.

இவர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்களும் உண்டு. அப்பாடல்களில் நகைச்சுவைமட்டுமன்றிப் பக்திச் சுவையும் காணலாம். தம் தம்பியின் மணக் கோலம் கண்ட சிவப்பிரகாசர், பின்வரும் பொருள மைந்த பாடலைப் பாடினார்:— 'சிவபெருமானிடத்தில் விநாயகன் வந்து, "ஐயா! என் செவியைத் தம்பி ஆறு முகன் கிள்ளினான்" என்று சிணுங்கினான்: உடனே தந்தை சிவபெருமான், வேலவனை அழைத்து, "அங்ங னம் ஏன் கிள்ளினை?" என்று கேட்க, வேலவனோ, "அண்ணன் என் ஆறுதலையின்கண்ணுள்ள கண்களை ஒவ்வொன்றாக எண்ணினான்" என்று கூறினன். அப் போது விநாயகன் தேப்பித் தேப்பி அழத் தொடங்கினான். அதனைக் கண்டு தந்தை, "நீ தம்பியை ஏன் கேலி செய்தாய்?" என்று கேட்க, விநாயகன் "என் னிடமுள்ள துதிக்கையின் நீளத்தை எத்தனை முழம் இருக்கிறதென்று தம்பி அளந்து பார்த்தான்" என்று விடையிறுத்தான். அதுகேட்ட மயிலவனும் முருகன் ஒன் றும் பேசமுடியாமல் புன்சிரிப்புடன் நின்றான். அப்போது உமையவள் ஆங்கு வந்தனள். அவளைப்பார்த்து இறை வன், "உன்மைந்தர்தம் செயல்களைப் பாராய்" என்றான்.

உலகெலாம் ஈன்ற கன்னியாம் உமையம்மை, மூத்த பிள்ளையாம் கணபதியை அருகில் அழைத்து அகமகிழ்வு கொண்டனள். இத்தகையோர் உம்மை மகிழ்வுடன் காப்பாராக'' என வாழ்த்துகின்றார்.

'' அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான், ''ஐய! என்
செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன்'' என்றே சிணுங்கிடவும்,
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே, ''அண்ணனென் சென்னியில்
விளங்குகண் எண்ணி னன்'' என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி விடகமேன்
செய்தாய்'' என,
'' மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன, மயிலவ
னகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா'' யெனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங் கருப்பமாய்ப் பெற்ற
கன்னி,
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்,
களிப்புடன் உமைக்காக்கவே''

நகைச்சுவையுடன், ஆழ்ந்த கருத்தும், இறையுணர்வும் கொண்ட பாடலாக உள்ளதன்றோ இது! இது போன்ற தனிப்பாடல்களும் பாடியுள்ளார் சிவப்பிரகாசர்!

32 வயதுக்குள்ளாகவே இத்துணை நூல்களையும் இத்துணைப்பாக்களையும் பாடியுள்ளார் எனின் இவர்தம் கவிப்புலமையை என்னென்பது? இறைவன் அளித்த அருட் கொடையே இது!

இத்தகு பக்திப்பாக்களை நாம் உள்ளமொன்றிப் பாடுவோமானால், அவை, நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் உவக்கும் தன்மையினவாய் இலங்கும். இத்தகு பாக்களை நாளும்பாடி நம்பெருமான் திருவருட்பேற்றினைப் பெறுவோமாக!

வாழ்க சிவப்பிரகாசர் திருநாமம்!

மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

தோற்றம்: 1870 மறைவு: 1946

கவிதை

பண்டித வித்துவான் மு. உலகநாதன்

விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

அன்னைத் தமிழ்க்கோர் இராகவனார்!
அயோத்தி தனக்கோர் இராகவனார்!
அன்பின் வழியில் இவ்விருவர்
அலகில் புகழைப் பெறுகின்றார்!
முன்னைத் தமிழின் புகழ்தன்னை
முயன்று வளர்த்த நற்பெருமை
என்றும் இராகவ ஐயங்கார்
எழுத்தில் நின்று புகழ்கூட்டும்!

உரைகள் தம்மை ஆற்றுவதில்
உயர்ந்த நூல்கள் எழுதுவதில்
விரைந்து கவிதை புனைவதனில்
வேற்று மொழியின் மொழிபெயர்ப்பில்

ஆரவர் கண்ட சமயத்தைக்
கூறி விளக்கும் நற்போக்கில்
உரைகள்! விளக்கம் தருவதனில்
உயர்ந்த மேதை! இராகவனார்!

ஆராய்ந் தறிந்தே இவர்சொன்னார்
அனைத்துக் கருத்தும் அறிஞர்களின்
ஆராய்ந் தறியும் கருத்துக்கே
அமைவாய்; மறுப்பாய்க் கிடந்தாலும்
தேராக் கருத்தைத் தெளிவதற்குச்
சிறந்த மூலப் பொருளாகும்!
சீரா மன்பேர் போலிவர்பேர்
சிறந்து விளங்க வாழ்த்துவமே!

மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

வித்துவான் S. ஆழ்வாரையங்கார், மதுரை.

தமிழகத்துச் சிறந்த வைணவத்தலங்களுள் நம்மாழ்வார் என்ற சடகோபர் அவதரிக்கும் பேறுபெற்ற ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்தவர்களிற் சிறந்தவர் நைத்ருவ காசிப கோத்திரத்தவரான அந்தணராவர். அம்மரபினருட் சில குடும்பத்தினர் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு சேது நாட்டுக்கு வந்து குடியேறினர்.

இந்நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த முத்துராமலிங்க சேதுபதியின் இரண்டாவது அமைச்சர் பதவியில் இருந்த கிருஷ்ணையங்காரின் மூத்த பேரர் நாராயணையங்கார் என்ற பங்காருசாமி ஐயங்காராவர். அவருக்கு இருபுதல்வரும் ஒரு புதல்வியும் இருந்தனர். அவர் வடமொழி தென்மொழிப் புலமையும் சமய நூல் ஆராய்ச்சியும் மிகவுடையார். இவர் இளவலாகத் தோன்றியவர், சதாவதானம் முத்துசுவாமி

ஐயங்காரென்பவர். இவ்விரு பெரும்புலவர்களின் பின் பிறந்த புதல்வியாரின் திருப்பெயர் பத்மாசனி அம்மாள் என்பது. இவ்வம்மையாருக்கும், பரமக்குடியை யடுத்த தென்னவராயன் புதுக்கோட்டை என்ற சிற்றூரில் வாழ்ந்த இராமாநுஜையங்காருக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவரில் இளையவரே நம் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் ஆவர். இவர் சிறு வயதினரா யிருந்தபொழுதே தந்தையார் காலமானர். உடனே இவரது இளைய அம்மானாகிய முத்துசுவாமி ஐயங்கார் தம் தங்கையாரையும் அவர்தம் மைந்தர்களையும் தம்மிடம் வருவித்துக்கொண்டு தமது மேற்பார்வையில் அவர்களை கல்விகற்கச் செய்தார். இராகவையங்கார் ஆங்கில உயர்நிலைப்பள்ளியில் கல்விகற்றாரெனினும் பெரும்புலவ ரான தம்தாய் மாமனுடன் ஐந்து வயது முதலே பழகி வந்த காரணத்தால் தமிழ் நூல்களை விரும்பிக் கற்று பிழையறத் தமிழ் நடையில் எழுதவும் பேசவும் வல்லவ ரானர். தமிழ் பாக்கள் இயற்றும் வன்மையும் பெற்றார்.

இவர் மெட்ரிகுலேஷன் வகுப்பில் படித்துக்கொண் டிருந்தபோது இவர்மனம் ஆங்கிலக் கல்வியில் முழுமை யும் பற்றாமல் தமிழ்ப் பயிற்சியையே நாடியது. அவர் பள்ளிப் படிப்பைவிட்டுக் குடும்பத்தார்க்கு அறியாமல் வெளியேறித் திருநெல்வேலி சென்று அந்நகரில் பிரபல வக்கீலாக இருந்த கிருஷ்ணசாமி ஐயங்காரது உதவி பெற்று, முன்பே தம் அம்மானைப் பற்றி அறிந்து பரி சளித்த தமிழ் வள்ளலான ஊற்றுமலை ஜமீன்தார் இரு தயாலய மருதப்ப தேவரையடைந்து, அவர் ஆதரவு பெற்று அவர் மீது பல பாக்கள் பாடிப் பரிசுகள் பெற்று இருந்தபொழுது அம்மானாகிய முத்துசுவாமி ஐயங்காரர் இவர் இங்கிருத்தலையறிந்து, ஜமீந்தார் அநுமதிபெற்று இவரைத் தம்பால் அழைப்பித்துக் கொண்டு முறையே

தமிழ்ப்பாடங் கற்பித்து வந்தார். இராகவனரும் நுண்ணறிவோடு இலக்கண இலக்கியங்கற்றுத் தேர்ந்து எழுதவும் பேசவும் வல்லவர் ஆனர். பின் மதுரைச் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராயமர்ந்து ஜானகி அம்மாள் என்னும் மாதரசியை மணந்து நன்கு இல்லறம் நடத்தி வந்தார்.

நல்லாரிணக்கம்

திருமணத்தின் பின் மதுரையினீங்கித் திரிசிரபுரம் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராயிருந்த இராகவனர் பெரும் புலவர்களாகிய பூண்டி அரங்கநாத முதலியார், உ. வே. சாமிநாதையர் முதலானவர்களது பெரு மதிப்பையும் நன்னட்பையும் பெற்று விளங்கினர். பின் பாஸ்கரசேதுபதியரசர்மேல் பாக்கள் பாடிப் பொருள்விளக்கி நவராத்திரி விழாவில் அரசரால் பரிசு பெற்றார். இவர் புலமைத் திறத்தை உசாவி அறிந்த அரசர் இவரைத் தம் ஆஸ்தான வித்வான் ஆக்கினர். அன்று முதல் இவர் சேது சமஸ்தான வித்துவான் என்ற சிறப்புப் பெயருடன் அம்மன்னர் அவையை அலங்கரித்து தலைமைப் புலவராக விளங்கினர்.

சேது வேந்தரால் விசேட காலங்களில் கூட்டப்படும் புலவர் அவைகளிலெல்லாம் நம் இராகவனரால் தமிழின் அருமை பெருமை பற்றியும் சேக்கிழார் கம்பர் முதலிய மகாகவிகளின் சிறப்புக்கள் பற்றியும் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்ந்துவரலாயின. அக்காலத்து அரசரை நாடிவந்த புறநாட்டுப் புலவர்களில் பலர் இவர் புலமைத் திறத்தோடு கூடிய சொல்வன்மையை உணர்ந்து பேருவப் படைத்து புகழ்மாலை சூட்டியதுண்டு.

பாஸ்கர சேதுபதி தம் ஆஸ்தானப் புலவராகிய இராகவனரிடம் வைத்திருந்த பேரன்பிற்கும் நன்மதிப்

பிற்கும் எல்லையாக அம்மன்னர் இவர்க்களித்த பெரும் பரிசு தந்தப் பல்லக்காகும்: புலவர் பெருமக்களுக்குப் பண்டைக்கால மன்னர் காட்டிவந்த மரியாதைகளுட் சிறந்தது இது என்பதை யாவரும் அறிவர். அம்முறையில் நவராத்திரிபோன்ற அரண்மனை:விழாக்களில் தம் அவைக்குச் சிவிகையூர்ந்து சிறப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இஃது அரசரால் இவர்க்கு அளிக்கப் பட்டதாகும்,

சேது வேந்தர் பல சமயங்களில் இவர்க்களித்த பல நூல்களிலும் இவரைப்பற்றி வரைந்துள்ள வாசகங்கள் பலவும் அவரால் இவர் எத்துணை மதிக்கப்பட்டிருந்தார் என்பதற்குச் சிறந்த சான்றுவனவாம். ஒன்று கீழ் வருமாறு:—

"நாற்கலையும் தேர்புலவர் நாணுவரே நீணிலத்தில்
பாற்கரனைச் சாருமொரு ராகவனைப் பார்த்தலுமே"

என்பது.

1901ம் ஆண்டு பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராயமர்ந்து 1903ல் சங்கத்து வாயிலாகத் தொடங்கப்பெற்ற "செந்தமிழ்" என்னும் திங்கள் தாளுக்கும் முதலாசிரியர் ஆயினர். அக்காலத்தில் அத்தாளில் இவர் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரைகளை வியந்து பாராட்டாத தமிழறிஞர் இல்லை என்றே கூறலாம்.

நம் இராகவனார்க்குப் பாஸ்கரர் அவ்வப்போது அளித்த விலையுயர்ந்த பொன்னாடைகளும் சால்வைகளும் எண்ணில் அடங்கா. அவற்றுட் சிறந்து இன்றும் அவர் இல்லத்தில் சேது வேந்தர் தம் பெயர் குறித்தளித்தபல

தொன்னூல்களோடு விளங்குவது கண்ணைக் கவரும் அரிய வேலைப்பாடமைந்த பீரோவாகும்.

இங்ஙனம் தம்மையடைந்தார்க்குக் கற்பகதருவாய் விளங்கிய பாஸ்கரர் 1903ஆம் ஆண்டு புலவர் நிலை கலங்கத் தம் பருவுடலை நீத்தார்.

பின் தேவகோட்டையில் அமர்ந்து, நகரத்தார் பலர்க்கும் தமிழ்க்கல்வியூட்டியும் பெருங்கொடையாளி யாகிய பெரிய மைனர் என்ற மெ. அரு. இராமநாதன் செட்டியாரவர்களுக்குத் தமிழாசிரியராயமர்ந்து அவரது தமிழறிவை வளப்படுத்தி அவர்க்கு உசாத்துணையாகி அவர்பால் வரும்புலவர்களுக்குத் தக்கபரிசுகள் வழங்கச் செய்தும் வந்தார்.

பாஸ்கர சேதுபதியின் தவப்புதல்வராகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வர சேதுபதியவர்களாலும் அவர் தம் தவப்புதல்வர் ஸ்ரீ சண்முகராஜேஸ்வர சேதுபதியவர் களாலும் மிக மிக மதிக்கப்பெற்றும் ஆயுளுள்ளவரை ஆதரிக்கப்பெற்றும் பல நூல்களை இயற்றியும் வெளி யிட்டும் தமிழ்த் தொண்டு புரிந்து இவ்வாறு தென்னுட் டுத்தமிழர் திலகமாய் விளங்கிய இப்பெரு நாவலர் தம் முதுமைத் தளர்ச்சியால் உடல் நலங்குன்றி 1946ஆம் ஆண்டு சூலை மாதம் 11ஆம் நாள் தமது 77ஆம் வய தில் பலரும் இரங்கப் பரமபதம் எய்தினர்.

இலக்கியத்தில் இராகவையங்கார்

செல்வி கு. இரா, சக்திதேவி, M. A.
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

சங்கத் தமிழ் வளத்தைச் சாற்றிப் பங்கமறக் கம்பன்றன் பாநயங்கள் இசைத்துச் செஞ்சொற் பொருளுரையால் 'செந்தமிழ்' இதழை மேன்மையுற நடத்திய திரு. இரா. இராகவையங்காரின் நூற்றாண்டு விழாத தைத் தமிழுலகு சிறப்புறக் கொண்டாடி மகிழ்கின்றது. 'செந்தமிழ்' ஆசிரியராய் விளங்கிய அன்னாரின் மறைவுக்குத் தமிழன்பர் இயற்றிக் குவித்த எண்ணற்ற இலக்கியங்களின் இரங்கற் குரலை ஈண்டுத் தொகுத்துத் தருகின்றோம்.

"கம்பன் பிறப்போ கபிலரவ தாரமோ
இம்ப ரிவனென்ன இருந்தா னிறந்தானே
செம்பதுமை ஈன்றருளும் சீராகவனோடும்
அம்புவியிற் காண்டற் கரும்புலமை மாய்ந்ததுவே.
செந்தமிழின் பாவளமோ தேர்சமய தத்துவமோ
அந்தமில்சீ ராழ்வார் அரும்பா சுரநயமோ
இந்த உலகியலோ இராகவன்வாய்
வாய்த்தவெலாம்
விந்தைமிகுத் தோர்க்கு வியப்பே விளைத்தனவால்".

—திரு. மு. இராகவையங்கார்

"விற்போரில் எதிர்த்தவர்தம் விறலழிக்கும்
வீரனிரா கவன்போல் விஞ்சிச்
சொற்போரில் நிகரில்பெரு நாவலனும்
இராகவன் நாம் துயரச் சென்றான்
கற்போர்விண் புலவர்சுவை கண்டறியாத்
தமிழருத்தக் கருதியோ? நம்
அற்போரு மவன்அதனை அவர்க்குணர்த்து
மருத்திகொலோ அறிகி லோமே"

திரு. ச. சோமசுந்தர பாரதியார்.

"கால இருளிற் கரந்தபொருள் பற்பலவும்
காலும் மதியொளியாற் காட்டிக் கடல்புடைசூழ்
ஞாலமிசை ஆராய்ச்சி யாளர்பலர் நண்ணுதற்கு
மூலமாய் நின்ற முதல்வா! மறைந்தனையோ.

—திரு இராமநுச ஐயங்கார்

" நன்னூலா ருரைத்தநல்லா சிரியரிலக்
கணமனைத்தும்
நாட்டில் வாய்ந்து
பன்னூலு'மெல்லைகண்டு பாவலர் சிகாமணியாய்ப்
பாரில் வாழ்ந்த
முன்னூலின் மணிமார்பா இராகவப் பேர்ச்
சொன் முகிலே முகவை வாழ்வே
யென்னூலா சிரியநினை யிழந்துலக முறுதுயருக்
கெல்லை யுண்டோ!"

—திரு. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள்

பெரும் புலவர்தம் புகழைப் பாவலரும் போற்றினர்; நாவலரும் ஏத்தினர். உரைநடை வித்தகர் திரு. பண்டிதமணி கதிரேசச் செட்டியார் சொற்களிலே கொணர்ந்து நிறுத்துகிறார். "கம்பர் கவி நயங்களை இவர்கள் பேசத் தொடங்கினால், கேட்பவருள்ளம் அப் பேச்சில் ஈடுபட்டுச் சுவை யுலகத்தில் இன்புற்று உலவும் என்பது மிகையாகாது. மகாவித்துவான் ஐயங்கா ரவர்களோடு அறிவுடையார் சந்திக்க நேர்ந்தால் வேறு உலகியற் பேச்சுக்களைப் பேசக்காண்டல் அரிதாகும். பேச்செல்லாம் தமிழிலக்கிய மணமாகவே இருக்கும். எத்துணை நேரமாயினும் இலக்கியப் பொருள் நயங் களைச் சலிப்பின்றிப் பேசி மகிழ்விக்கும் ஆற்றல் இவர்க ளிடத்து விஞ்சிநிற்பதுண்டு. பழைய முறையில் அழுந் திக் கற்றுப் புதிய காலத்திற்கும் ஏற்பத் தமிழ்க் கலை நயத்தை விளக்கிச் சொல்லும் இவர்களுடைய வாக்கு வன்மையை மேனாட்டு நூல்களிலே திளைத்த அறிவுடை யார் பலரும் மிகப் பாராட்டி வியந்து பேசுதல் உண்டு" என்கிறார் பண்டிதமணி கதிரேசச் செட்டியார்.

கீதையை மொழிபெயர்த்து, கேடில்புகழ்க் காளிதாச ஞர் சாகுந்தலத்தைத் தமிழ்ச்செய்து, தீதகலா திருமால் திருவடிமேல் பாமாலை ஓதிய திரு. இராகவையங்காரின் அறிவுக்கினித்து வந்த சொல்லமுதத்தைக் கீழே காண் போம்: திருமால் திருப்பதிகளை அடிக்கடி நினைவுகூர் வார்க்குப் பயன்படும் வண்ணம் 'நூற்றெட்டுத் திருப்ப திப் பாடல்கள்' செந்தமிழில் வெளிவந்த அவர்தம் நூலாகும்.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் - கஅ

திரமுயர் கூடல்கு றுங்குடி பேரை
சீவர மங்கைமெய் யம்மலை கோளூர்
வரகுண மங்கைதண் கால்குரு கூர்நன்
மாலிருஞ் சோலைபு லாணிகு ளந்தை
சுரர்திகழ் கோட்டிபு ளியங்குடி மோகூர்
தொலைவிலி மங்கலம் புதுவைவை குந்தம்
பரவுபெ ரும்புகழ் விஞ்சிய பாண்டிப்
பைந்தமிழ் நாட்டுப் பதிபதி னெட்டே'

" உண்ட முதல்வ னுயரருளே யூற்றெடுத்து
மண்டி வழிந்ததென வண்பெரியார்—விண்ட
திருப்பாடல் பெற்ற திருப்பதிநூற் றெட்டும்
விருப்பாயி னர்பெறுவர் வீடு "

சந்த அமைதிகொண்ட இப்பாடல்கள் தேறுந் தோறும் இனிய திரு. இராகவையங்கார் தம் தமிழ்ப் புலமையைக் காட்டுவதாகும். பெரும்புலவரின் நினை விதழாக வந்த செந்தமிழ்ப் பகுதியில் ஆசிரியர் தலையங் கத்தில் வெளிவந்த பாடல், இறந்தும் இறவாத இவர் தம் புகழை உலகுக்கு உணர்த்தச் செய்யும்!

மதிப்புரை

மதுக்கலசம்

கவிஞர் ஏ. எம். அபூபக்கர், கல்முனை, இலங்கை,

[இந்தியாவில் கிடைக்கும்:— 'குயில்' 9, காமாட்சி அம்மன் கோவில் தெரு; திண்டிவனம். விலை ரூ 2—00]

சிக்கல்களும், போராட்டங்களும் நிறைந்துள்ள இன்றையச் சூழலிலும் இன்பத்தைத் தேடி யலையாதவர்கள் எவருமிலர். கவிஞர் அபூபக்கரின் சுவை நிறைந்த மதுக்கலசத்தினின்றும் சிதறும் ஒவ்வொரு துளி மதுவும் பேரின்பத்தை அடைவதற்கு வழி வகுக்கும் ஞானபானமாக அமைந்துள்ளது. கவிஞரின் ஆழ்ந்திருக்கும் உள்ள உணர்ச்சிகளெல்லாம் எழுத்து வடிவம் பெற்று, அறுசீர் விருத்தத்தில் செவியில் தேனுகிப் பாய்கின்றன,

இறைவனைத் தன் காதல் தலைவியாக்கி, மெஞ்ஞான உணர்வை மதுவாக்கிய பேரின்பத்தை அடைதற்கு முயலும் இந்த முறை 'சூஃபி' (Sufi) முறை என்று பாரசிகத்தில் பெயர் பெற்றுச் சிறந்துள்ளது. உமர் கயாம் போன்ற பெரும் புலவரின் வழிவந்த திரு. அபூபக்கர் இந்த முறையைப் பின்பற்றித் தமிழுக்கு அணி சேர்க்கிருர்.

"அருளும் மங்கை அவளே தான்
அழியா திருப்பாள்; அவளியும்
பொருளாம் புதிய மதுவே தான்
பொன்ரு இன்பம் தருமாமே"

என்று வருகின்ற கருத்தே நூலின் மையக் கருவாக அமைகிறது. இடையில் கவிஞர் கூறும் தத்துவங்கள் வாழ்க்கையின் பட்டறிவோடு இயைந்து வருவதால் பொலிவுடன் இலங்குகின்றன.

தீமையை விதைத்து விட்டவன் அதன்பயனைத் தாங்கிக் கொள்வதற்கு அஞ்சி, இறைவனை வேண்டி நிற்கச், சித்தனான இறைவனே செவி மூடிக் கொண்டான் என்றமைக்கும் சமயத் தத்துவம் நெஞ்சைத் தொடுகிறது.

'' வித்தை விதைத்து விழைவுக்காய்
விழைந்து நோக்கி நிற்கின்றீர்
சித்தாய் விளங்கும் அவனோதன்
செவியை மூடி இருக்கின்றான் (54)

என்று கவிஞர் பாடுகின்றார். மாயையில் உழலச் செய்யும் உலக இன்பம் முழுவதையும் கவர்ச்சி கொண்ட விலை மாதுவாக்கிப், பேரின்பம் தருகின்ற இறையைக் காதல் தலைவியாக்கிப் பாடுகின்ற ஒவ்வொரு பாடலும் உலகாதயத்துடன் கூடி இருந்தாலும் இலக்கியச் சுவை கொண்டு மிளிர்கின்றது.

எளிமையுடன் ஆன்ம எழுச்சி கொண்டு ஒலிக்கின்ற அபூபக்கரின் 'மதுக்கலசம்' சுவைமிகுந்த இலக்கியமே.

இளம்பிறை

[திங்கள் வெளியீடு, கொழும்பு-13.]

'இளம் பிறை' ஆண்டு மலரின் ஒவ்வோர் இதழும் ஈழத்து முகம்மதிய நண்பர்களின் ஆர்வமிக்க தமிழிலக்கிய முயற்சியை எடுத்துக் காட்டுகின்றது. இதில் உள்ள இருபத்தைந்து கதைகள், ஆறு கவிதைகள், ஒரு குறுங்காவியம் - ஆகியன படிப்போர்க்குச் சுவை பயக்கின்றன. 'ஈழத்து ஆற்ற லிலக்கியப் போக்கிற்கு இளம்பிறை ஒரு திறவுகோல்' என்று ஆசிரியர் கருதுவது பொருத்தமாகவே உள்ளது.

மீலாத் விழாக்களில் ஈழத்திற்குத் தமிழகப் பேச்சாளர் அழைக்கப்படும் மரபினை மேம்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட தலையங்கம் நேர்மைக் குரல் எழுப்புகிறது. 'மத்கபுகள்', தமிழ் வளர்க்கும் வள்ளல்கள்', 'அன்ப'— இவை சிறந்த செய்தியுணர்த்தும் தன்மைக்கு எடுத்துக்காட்டுகள். டாக்டர் எஸ். சுல்தானின் கட்டுரையில் அரசியல் விளக்கம் மலரைப் பொலிவூட்டுகின்றது.

சுவை பயக்கும் கவிதைகள், பொது அறிவு விடுகதைகள், கட்டுரை, சிறுகதைகள் முதலியன இதழை அணி செய்கின்றன. ஈழத்து மக்களின் தமிழார்வத்தை வளர்ப்பது 'இளம்பிறை' எனலாம்.

— செல்வி கு. இரா. சக்திதேவி, M. A.

__வரப்பெற்றோம்__

[பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு விழா மலர் பக். 100. விலை ரூ. 1—00. வெளியீடு: பாண்டித் துரைத் தேவர் கல்விக் குழு, மில் லயன், மதுரை·10:]

பைந்தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களின் வாழ்க்கை வரலாறு, தமிழ்த் தொண்டு ஆகியவற்றை விளக்கும் வகையில் 14 கட்டுரைகளும் 8 கவிதைகளும் கொண்ட தண்டமிழ் மலராகக் காட்சியளிக்கிறது. உள்ளத்தைத் தொட்டு, உணர்ச்சியைத் தூண்டிவிடும் வகையில் இக்கட்டுரைகளும், கவிதைகளும் அமைந்துள்ளன. வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களைப் பற்றி ஓரளவு இம்மலர் துணைபுரியும்.

— *'சிவன்'*

சங்கச் செய்திகள்

மாநிலத் தனிப் பயிற்சித் தமிழ்க் கல்லூரிகள் முதல் மாநாடு

மாநிலத் தனிப்பயிற்சித் தமிழ்க் கல்லூரிகளின் முதலாவது மாநாடு, நம் சங்கத்தில், 18, 19—7—70 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் 18—7—70 முற்பகல் 10 மணிக்குச் செல்வியர் ஆனந்தலட்சுமி, கமலா ஆகியோரின் இறைவணக்கப்பாடலுடன் மாநாடு தொடங்கியது. சங்கச் செயலர் அறநெறியண்ணல் திரு. கி பழநியப்பனார் அவர்கள். இம்மாநாடு கூட்டப்பட்டதன் இன்றியமையாமையை எடுத்துரைத்தனர். இவற்றை ஒழுங்குபடுத்தி முறையாக அமைத்தற்கெனத் திருவாளர்கள் ஆ. செபரத்தினம், M, A., M. Litt., புலவர் ச. சாம்பசிவன், S. V. மூர்த்தி, புலவர் அத்தப்பன் ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவினர் 14 தீர்மானங்களாகச் சுருக்கித் தந்தனர். 2ஆம் நாள் 19—7—70 முற்பகல் 10 மணிக்கு மாநாடு தொடங்கிற்று. சங்கத் துணைத்தலைவர் P. அரங்கசாமிநாயுடு B.A., B.L., அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். வரவேற்புக் குழுத்தலைவர் திரு. ஆ. செபரத்தினம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியபின், மாநாட்டுத் தலைவர் உரைவேந்தர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தலைமைப் பேருரை நிகழ்த்தினர். பின்னர் 14 தீர்மானங்கள் முறையாக முன் மொழியப்பட்டும், வழிமொழியப்பட்டும், முழு மனதுடன் நிறைவேற்றப்பெற்றன. பின்னர்ப் புலவர் திரு. அ. அத்தப்பனும், செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. இரா.வே. நாராயணன் M.A., அவர்களும் நன்றிகூற நாட்டுவாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது. மாநாட்டிற்கு வருகைபுரிந்த அனைவர்க்கும் உணவும், உறையுளும் சங்கத்தில் அளிக்கப்பெற்றன.

(மாநாட்டு நிகழ்ச்சி தனி அறிக்கையாக வெளியிடப்பெற்றுள்ளது.)

தமிழாசிரியர்கட்கு விருந்து

மதுரையில் நடைபெற்ற மாநிலத் தமிழாசிரியர் கழக மாநாட்டை முன்னிட்டு, மதுரைக்கு வந்திருந்த தமிழாசிரியப் பெருமக்கட்கு, நம் சங்கத்தில் 8—௪—70 சனிக்கிழமையன்று இரவு 8 மணிக்கு அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது. ஏறத்தாழ 300 ஆசிரியர்கள் இதிற் கலந்துகொண்டனர். சங்கச் செயலர் திரு. கி. பழநியப்ப பிள்ளை அவர்கள், அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றனர். விருந்துக்குப்பின், சங்கத்தில் தங்கவும், தீர்மானங்களை ஆராயவும் வசதி செய்து தரப்பெற்றது.

'செந்தமிழ்' உறுப்பினர்கட்கு

நம் சங்கச் சார்பில் வெளிவரும் 'செந்தமிழ்' கடந்த 65 ஆண்டுகளாகத் தமிழ்ப் பணி செய்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி வரும் தனி ஏடாகச் 'செந்தமிழ்' திகழ்ந்து வருதல் கண்கூடு. இவ்வாண்டின் முதல் இதழ்(தொகுதி 66 பகுதி 1) இப்போது வெளிவருகின்றது. எனவே இதழுக்குரிய ஆண்டுக் கட்டணத் தொகை ரூ. 3/- ஐப் பணவிடை வழி அனுப்பிப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகின்றோம். ஏனையோரையும் செந்தமிழ் இதழ் உறுப்பினராக்கித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணைபுரிய அன்புடன் வேண்டுகின்றோம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன்விழா

தமிழ்ப் புத்தக வெளியீட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொடங்கி 50 ஆண்டுகள்

நிறைவெய்துகின்றன. சிறந்த தமிழ்ப் புத்தகங்களை அழகான முறையில் அச்சிட வேண்டுமென்ற நோக்க முடைய இக் கழகம் ஐநூற்றுக்கு மேற்பட்ட பங்காளி களைக் கொண்ட பொது நிறுவனம். இதுவரை 1400 அரிய நூல்களை இக்கழகம் வெளியிட்டுள்ளது. பழந் தமிழ் இலக்கண இலக்கிய நூற்களிலிருந்து அறிவியல், சட்டம் போன்ற புதுப்புதுத் துறைகளிலும் கழகம் நூல்களை வெளியிட்டுள்ளது. சிறுவர்களுக்காகச் சில நூறு நூல்களை வெளியிட்டது கழகமே. இதன் 'பொன் விழா' வருகின்ற திசம்பரில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும்.

புத்தக வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள கழ கம், பல அறப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. தன் வரு வாயில் பாதியை அறப்பணிக்கென்றே ஒதுக்கி அதன் வழி 'மறைமலையடிகள் நூல் நிலையம்', 'மறைமலையடிகள் கலைமன்றம்', 'சிவஞானமுனிவர் நூல்நிலையம்', 'குமர குருபரர் குழந்தைப் பள்ளி', 'திருவள்ளுவர் தமிழ்க் கல் லூரி முதலிய நிலையங்களை நடத்தி வருகின்றது.

இத்தனை பணிகளையும் சீருறச் செய்து வருபவர் அதன் ஆட்சியாளராக வீற்றிருக்கும் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களே. கழகத் தொடக்கத்திலிருந்தே அவர் சென்னை முகவராக இருந்து, 1944முதல் அதன் ஆட்சிப் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகிறார். தம் வாழ்நாள் முழுவதையும் கழகப் பணிக்காகவே செலவிட்டுவரும் அவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டி இந்திய அரசு "பத்ம சிறீ" என்ற விருதை 1969-இல் வழங்கி, அவ ரைப் பெருமைப்படுத்தியது. கழகத்தின் பணியும் திரு. சுப்பையா பிள்ளையின் தொண்டும் மேன்மேலும் சிறப்ப தாக என வாழ்த்துகிறோம்.